

அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்த

இருபதாவது

நினைவுப் பேருரை

# மலையக சமூக மேம்பாட்டில் ஆசிரியர்களின் வகிபங்கு


**பொன். இராமதாஸ்**

விரிவுரையாளர் கல்விப்பீடம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்



அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு

2019

# மலையக சமூக மேம்பாட்டில் ஆசிரியர்களின் வகிபங்கு

அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்த இருபதாவது
நினைவுப் பேருரை

**பொன். இராமதாஸ்**
விரிவுரையாளர், கல்விப்பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு
2019

| | | |
|---|---|---|
| நூல் | : | மலையக சமூக மேம்பாட்டில் ஆசிரியர்களின் வகிபங்கு |
| ஆசிரியர் | : | பொன். இராமதாஸ் |
| பதிப்பாசிரியர் | : | தை. தனராஜ் |
| வெளியீடு | : | எம். வாமதேவன்<br>அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு |
| திகதி | : | 05.10.2019 |
| பக்கம் | : | 56 |
| அச்சு | : | குமரன் அச்சகம்<br>39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06<br>தொ.பேசி: 011 2364550<br>மின்னஞ்சல்: *kumbhlk@gmail.com* |

# அறிமுகம்

அனைவருக்கும் வணக்கம்,

அமரர். இர.சிவலிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக நிகழும் இருபதாவது நினைவு தினத்தில் அவரது ஞாபகார்த்த உரையினை ஆற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தமையை ஒரு பெரும் கௌரவமாகக் கருதுகின்றேன். இத்தகைய பெருமைக்குரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழுவினருக்கு, குறிப்பாக எனது ஆசானும் ஒய்வுநிலைப் பேராசிரியருமாகிய பெருமதிப்பிற்குரிய தனராஜ் அவர்களுக்கும் ஞாபகார்த்தக் குழுவின் தலைவர் திரு.வாமதேவன் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அமரர் இர.சிவலிங்கம் அவர்கள் அடிப்படையில் சேவை நோக்கும் அர்ப்பணிப்பும் கொண்ட சிறப்புமிகு ஆசிரியர் ஆவார். அத்துடன் அவர் ஒரு சிறந்த இலக்கியவாதியாகவும் எழுத்தாளராகவும் ஆற்றல்மிக்க பேச்சாளராகவும் திகழ்ந்தவர். சுயமுயற்சியின் மூலம் வாழ்க்கையில் எத்தகைய சாதனைகளையும் சாதிக்கலாம் என்பதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்தமைக்கு அவர் பின்னாளில் பெற்றுக் கொண்ட சட்டத்தரணி பதவி சான்றாகும். இத்தகைய பன்முக ஆளுமையே அமரர் இர.சிவலிங்கம் அவர்களை மலையக மக்களின் பெருமைக்குரிய தலைமகனாக ஆக்கியது.

மலையகத்தில் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாக ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி திகழ்வதற்கான அடித்தளத்தினை இட்டவர் அமரர் இர.சிவலிங்கம். இங்கு ஆசிரியராகவும் அதிபராகவும் சேவையாற்றிய போது தனது அயராத உழைப்பினாலும் ஆசிரியர் குழாத்தினரின் ஒத்துழைப்போடும் மலையகத்தின் சிறந்த

மாணவர் தொகுதியை உருவாக்கினார். அவர்களில் பலர் இன்றும் மலையக சமூகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி உயர் பதவி நிலைகளில் இருக்கின்றனர். இவை மலையக சமூகம் கல்வியில் முன்னேற்றம் அடைய வேண்டும், அந்தஸ்தும் கௌரவமும் தன்மான உணர்வும் கொண்டதொரு சமூகமாக திகழ வேண்டும் என்பதற்காக கல்வியை ஒரு உந்துசக்தியாக அமரர். இர.சிவலிங்கம் பயன்படுத்திக்கொண்டமைக்கு சான்று பகிர்கின்றன.

அமரர் இர.சிவலிங்கம் மலையகச் சமூகத்தின் விடிவிற்காக, முன்னேற்றத்திற்காக பங்களிக்கக்கூடிய மாபெரும் சக்திகளில் ஒன்றாக மலையக இளைஞர்களை அடையாளம் கண்டார். மலையக இளைஞர்களுக்கான தலைமைத்துவத்தை மேம்படுத்தும் நோக்குடன் "மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம்", மலையக இளைஞர் முன்னணி" போன்ற பல அமைப்புகளை நிறுவினார். இந்த அமைப்புகள் மலையக இளைஞர்கள் விழிப்புணர்வு பெறுவதற்கும், சமூகப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள் வதற்கும் களமாக அமைந்தன. இதன் மூலம் மலையகத்தின் கல்விக்கற்ற இளைஞர்கள் என்ற வரையறைக்கு அப்பால் அனைத்து இளைஞர்களையும் சமூக பிரக்ஞை மிக்கவர்களாகவும் சமூக நேசமிக்கவர்களாகவும் வளர்த்தெடுப்பதற்கு அமரர். இர.சிவலிங்கம் பங்களிப்பு செய்தார்.

இத்தகைய பெருமகனின் ஞாபகாரத்தப் பேருரைகளை கடந்த இருபது வருடங்களாக நடத்தி வருகின்ற அன்னாரின் பெருமைக் குரிய மாணவர்களான திரு.வாமதேவன் மற்றும் பேராசிரியர் தனராஜ் ஆகியோர் எமது பாராட்டுக்குரியவர்களாவர். மலையகப் பெருமகன் ஒருவருக்கு தொடர்ச்சியாக இருபது ஞாபகார்த்தப் பேருரைகளை நடத்தி முடித்திருப்பதே ஒரு வரலாற்று சாதனை யாகும். அவர்களது இச்சீரிய பணி தொடர வேண்டுமென வாழ்த்திக் கொண்டு எனது உரைக்கு வருகிறேன்.

**மலையக சமூக மேம்பாட்டில் ஆசிரியர்களின் வகிபங்கு**

மலையக சமூக மேம்பாட்டில் ஆசிரியர்களின் வகிபங்கு என்னும் தொனிப்பொருளில் ஞாபகார்த்த உரையை ஆற்றுமாறு பேராசிரியர்

தனராஜ் அவர்கள் ஆலோசனை வழங்கியபோது நான் பெரு மகிழ்ச்சி அடைந்தேன். சீடா செயற்றிட்டத்தின் கீழ் தோட்டப் பாடசாலை ஆசிரியராக பதவியேற்று பின்னர் பல்வேறு பதவி நிலைகளில் மலையக ஆசிரியர்களுடன் நான் நெருக்கமான உறவினை பேணி வந்துள்ளேன்.

ஆசிரியர் கற்கை நெறிகளில் கற்பிக்கும் போதும் ஆசிரியர் களோடு மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள் மூலமும் ஆசிரியர் களது பிரச்சினைகள், அவர்களது எதிர்பார்ப்புகள், அவற்றை நிறைவேற்றுவதில் எதிர்நோக்கும் இடர்பாடுகள் என்பன பற்றி நிறையவே அறியக்கூடியதாகவிருந்தது. அதேபோன்று மலையக பெற்றோர்கள், கல்வியதிகாரிகள், அரசியல் தலைவர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள் மற்றும் சமூக நோக்கம் கொண்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனான கலந்துரையாடல்களில் நான் பெற்றுக்கொண்ட அனுபவங்களும் கணிசமானவை. அந்த அனுபவங்களின் அடிப்படையிலேயே இந்த ஞாபகார்த்த உரை அமைகிறது.

# மலையக ஆசிரியர்கள்

**அறிமுகம்**

"இலங்கையில் *1824* ஆம் ஆண்டு கோப்பிப் பயிர்ச்செய்கை அறிமுகம் செய்யப்பட்டது. இது ஒரு பருவகாலப் பயிர்ச் செய்கை யாகக் காணப்பட்டமையினால் தற்காலிக தொழிலாளர்களே தேவைப்பட்டனர். இதனால் தொழிலாளர்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் வந்து போய்க் கொண்டிருந்தனர். *1870*களில் கோப்பிப் பயிரச்செய்கை Hamaleia Vastatrix என்னும் வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டது. இதனால் மாற்றுப் பயிராக தேயிலை அறிமுகம் செய்யப்பட்டது. தேயிலை பயிர்ச் செய்கைக்கு நிரந்தர தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். இதற்காக *19*ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தென் இந்தியாவில் இருந்து பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டு தேயிலைப் பெருந்தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களே பெருந்தோட்டப்புற தொழிலாளர்கள் ஆவர்". தாய் நாட்டில் வறுமையின் பிடிக்குட்பட்டிருந்த இம்மக்கள் குடியேறிய நாடுகளில் முதலாளித்துவத்தின் பிடிக்குட்பட்டனர். அவர்களது கல்வி புறக்கணிக்கப்பட்டிருந்து. தமது பாடசாலைகளைத் தாமே உருவாக்க வேண்டிய அவல நிலை காணப்பட்டது. ஆசிரியர் களையும் இவர்களே பராமரிக்க வேண்டியிருந்தது இத்தகைய தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் கல்விப் புகட்டுவதற்காக தோற்றம் பெற்ற பாடசாலைகளே "தோட்டப் பாடசாலைகள்" என அழைக்கப்படுகின்றன. - மூக்கையா, 1997; சின்னத்தம்பி, 1997).

இவ்வாறு உருவான தோட்டப் பாடசாலைகளுக்காக ஆசிரி யர்கள் பற்றிய வரலாறு மூன்று கட்டங்களாக வகுத்து முன்வைக் கப்பட்டுள்ளது.

i. பெருந்தோட்ட முகாமைத்துவதிற்குட்பட்டிருந்த காலத்தின் ஆசிரியர்கள் - *1870*கள் தொடக்கம் *1970*களின் ஆரம்பம் வரை

ii. பெருந்தோட்டப் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப் பட்ட காலத்தின் ஆசிரியர்கள் - 1970களின் ஆரம்பம் தொடக்கம் 1980களின் இறுதிவரை

iii. தற்கால ஆசிரயர்கள் - 1990கள் தொடக்கம் இன்றுவரை

**பாடசாலைகள் பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்குட்பட்டிருந்த காலத்தின் ஆசிரியர்கள் – 1870 தொடக்கம் 1970கள் வரை**

தோட்டங்கள் உருவாக்கப்பட்ட ஆரம்பக் காலங்களில் இரண்டு வகையான பாடசாலைகள் கங்காணிமார்களால் நிறுவப்பட்டிருந்தன (ஞானமுத்து 1976:15).

முதலாவது வகை கங்காணிமார்களது பிள்ளைகளுக்கும் தோட்டங்களில் இருந்த ஏனைய உத்தியோகத்தர்களது பிள்ளைகளும் கற்பதற்காக நிறுவப்பட்டவைகளாகும் இப்பாடசாலைகளில் தோட்ட நடத்துநர், கணக்குப்பிள்ளை, எழுதுவினைஞர் போன்றோரின் உயர்மட்ட பிள்ளைகளுக்கு கங்காணியின் எழுதுவினைஞர் ஆசியராக கடமையாற்றினார். இவ்வாசிரியர் வாசிப்பு, எழுத்து, எண் ஆகியவற்றையும் கொஞ்சம் ஆங்கிலத்தையும் கற்பித்தார்.

இரண்டாவது வகை "லயன் பாடசாலை" என அழைக்கப்பட்டது. இவை தொழிலாளர்களது பிள்ளைகளுக்கும் தொழிலாளர்களுக்குமென அமைந்தவையாகும். இப்பாடசாலைகளில் கங்காணியால் பிரபல்யமான ஒழுக்கவிதிகள், வாசிப்பு, தமிழ், செய்யுள்களை ஒப்புவித்தல் ஆகியன கற்பிக்கப்பட்டன. இப்பாடசாலைகள் தென் இந்தியாவிலும் யாழ்ப்பாண பிரதேசங்களிலும் காணப்பட்ட தமிழ் திண்ணைப் பள்ளிக்கூடங்களின் மரபை ஒத்திருந்தன.

இவ்விரண்டு வகைகளையும் தவிர விசேட நாட்களில் மட்டும் அண்ணாவிமாரால் நடாத்தப்பட்ட கூத்து, நாடகங்கள், பெண் பிள்ளைகளுக்கான கும்மி, கோலாட்டம் என்பனவும் கல்வி என்ற பெயரில் இடம்பெற்றன. இவை அவ்வவ்தோட்டங்களைச் சேர்ந்த தனிப்பட்டோரால் நடத்தப்பட்ட கல்வியமைப்பாகும் (பத்மநாபா, 1988; செல்வராஜ், 2004).

ஆரம்பக் காலங்களில் பெருந்தோட்டப் பாடசாலைகளில் மூன்று வகையான ஆசிரியர்கள் கடமையாற்றியுள்ளனர் என்பது தெளிவாகின்றது. முதலாவது கங்காணியினுடைய எழுதுவினைஞர் பகுதிநேர ஆசிரியராக இருந்துள்ளார். இவர் ஆசிரியராகவும், எழுதுவினைஞராகவும் கடமையாற்றியுள்ளார். இரண்டாவதாக கங்காணி தனது ஏனைய கடமைகளுக்குப் புறம்பாக லயன் பாடசாலை ஆசிரியராகவும் செயற்பட்டுள்ளார். இதனைத் தவிர விசேடக் காலங்களில் அண்ணாவிமார் கூத்து, நாடகம் என்பவற்றை கற்பிக்கும் ஆசிரியராக இருந்துள்ளனர்.

1904 ஆம் ஆண்டிலே 898 தோட்டங்கள் இருந்தன. அங்கு காணப்பட்ட 179 பாடசாலைகளில் 120 லயன் பாடசாலைகளாகவும் ஏனைய 59 பாடசாலைகள் அரச உதவியுடன் நடத்தப்பட்டவைகளாகவும் இருந்துள்ளன. இதன்படி பெரும்பாலான தோட்டங்களில் தோட்டப் பிள்ளைகள் கற்பதற்காக இத்தகைய லயன் பாடசாலைகளோ, ஆசிரியர்களோ இருக்கவில்லை அல்லது நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அறியப்படுகின்றது (சந்திரசேகரம், 1999).

1907 ஆம் ஆண்டு 8 ஆம் இலக்க கிராமிய பாடசாலைகள் தொடர்பான கட்டளைச் சட்டத்தில், தோட்டப் பாடசாலைகளுக்கான கட்டிடம், கட்டிடத்திருத்தங்கள், பாடசாலையை நடத்திச் செல்லல் தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆசிரியர் தொடர்பாகவும் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய கல்வித் தகைமைகள் தொடர்பாகவும் எதுவுமே குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும் 1920 ஆம் ஆண்டின் முதலாவது இலக்க கல்விக் கட்டளைச் சட்டத்தில், தோட்டப் பாடசாலைக்கென ஒரு திறமையான ஆசிரியரை நியமித்தல் தோட்ட நிருவாகியின் பொறுப்பாகும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், ஆசிரியர்கள் தங்களது பொறுப்புக்களில் இருந்து மீறும்போது வழங்கப்படும் தண்டனைகள் போன்றன இக் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தமை, தோட்டப் பாடசாலை ஆசிரியர்களை ஒரு முறைமைக்குள் கொண்டு

வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப முயற்சியாகக் கொள்ள லாம் என சங்கரலிங்கம் (1969) குறிப்பிட்டுள்ளார்.

தோட்டப்பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களது கல்வித்தகைமை குறைவாக இருந்தமையினை லிட்டில் (2002:182-183) பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

"பெரும்பாலான தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் தென்னிந்தி யாவில் இருந்து வருகைத் தந்தவர்களாக இருந்தனர். இவர்களிடம் தொழிலுக்கேற்ற தகைமைகள் குறைவாக இருந்தன. அல்லது முற்றாகவே தகைமைகளை கொண்டிருக்கவில்லை. இவர்கள் ஆசிரியர்களாகவும், தோட்ட அலுவலகங்களில் எழுதுவினைஞ ராகவும் சமகாலத்தில் பணியாற்றினர்".

தோட்டப்பாடசாலை ஆசிரியர்களது தகைமை பற்றி ஞானமுத்து (1976) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தோட்டப்பாடசாலை ஆசிரியர்களின் குறைந்தபட்ச தகைமை நிர்ணயிக்கப்பட்டிருந்ததே தவிர, அவர்களது கற்பித்தல் தேர்ச்சி பற்றிய எவ்வித நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை. இவர்களில் பலர் எட்டாம் தரம் வரையான கல்வித்தகைமையை மட்டுமே கொண்டிருந்தனர். எனினும் நீண்டகால சேவையின் அடிப்படையில் சேவைச் சான்றிதழ் பெற்றிருந்தனர். கல்விப் பணிப்பாளரின் நிருவாக அறிக்கையின்படி 1963 இல் 875 தோட்டப்பாடசாலைகளில் கற்பித்த 1197 ஆசிரியர்களில் 766 பேர் அதாவது 66 சத வீதத்தினர் சான்றிதழ் அற்றவர்கள் ஆவர்".

இதன்படி தோட்டப் பாடசாலைகளில் மிகவும் குறைவான கல்வித் தகைமைகளுடன் எதுவிதமான பயிற்சியும் பெற்றுக் கொள்ளாதவர்கள் ஆசிரியர்களாக இருந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. இது தொடர்பான விபரம் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1: 1958 இல் தோட்டப் பாடசாலைகளில் சேவையாற்றிய ஆசிரியர் விபரம்

| இல | ஆசிரிய வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பயிற்றப்பட்ட முதலாம் வகுப்பு ஆசிரியர்கள் | 11 |
| 02 | பயிற்றப்பட்ட இரண்டாம் வகுப்பு ஆசிரியர்கள் | 56 |
| 03 | பயிற்றப்பட்ட தற்காலிக ஆசிரியர்கள | 12 |
| 04 | தராதரப்பத்திரமுள்ள முதலாம் வகுப்பு ஆசிரியர்கள் | 17 |
| 05 | தராதரப்பத்திரமுள்ள இரண்டாம் வகுப்பு ஆசிரியர்கள | 16 |
| 06 | தராதரப்பத்திரமுள்ள மூன்றாம் வகுப்பு ஆசிரியர்கள் | 31 |
| 07 | மூன்றாம் வகுப்பு சேவைச்சான்றிதழ் பெற்ற ஆசிரியர்கள் | 06 |
| 08 | வரைதல் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்கள் | 03 |
| 09 | மூன்றாம் வகுப்பு பயிற்றப்பட்ட தற்காலிக தராதரப்பத்திரம் பெற்றவர்கள | 07 |
| 10 | தராதரப் பத்திரம் பெறாத ஆசிரியர்கள் | 927 |
| 11 | சென்னையில் பயிற்றப்பட்ட இந்திய ஆசிரியர்கள் | 29 |
| | மொத்தம் | 1115 |

மூலம் : *A History of the upcountry Tamil People in Sri Lanka. (1993)*

1920 ஆம் ஆண்டு முதலாம் இலக்க கட்டளைச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் பின்னர், 1923 ஆம் ஆண்டிற்கும் 1939 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 272 ஆக காணப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 820 ஆக அதிக ரித்தது. இவ்வாறு பாடசாலைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு ஏற்ப ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாமை யினால் இந்தியாவி லிருந்து ஆசிரியர்கள் அழைத்து வரப்பட்டமை தொடர்பாக,

1928 ஆம் ஆண்டு நிருவாக அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயம் தொடர்பாக லிட்டில் (2002:186-187) பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

"1923-1939 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தோட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வளர்ச்சியானது, தமிழ்மொழியில் கற்பிக்கக் கூடியவாறு தராதரம் பெற்ற, தராதரம் பெறாத ஆசிரியர்களின் பற்றாக்குறையினால் பெரிதும் பாதிக்கப் பட்டது. இலங்கையின் தொழில் ஆணையாளரும் கண்டியில் இருந்த இந்திய அரசாங்கத்தின் முகவரும் இந்த விடயத்தில் ஆர்வம் உடையவர்களாக இருந்தமையினால், அவர்களுடைய ஒத்துழைப்புடன் தோட்டப்பாடசாலைகளுக்கு இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டமையானது ஓரளவிற்கு நிலைமையை சமாளிக்க உதவியது".

இதன்படி இலங்கையின் தோட்டப்பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது வெளிப்படுகின்றது.

1943 இல் C.W.W கன்னங்கர அவர்களின் தலைமையிலான கல்வித் தொடர்பான விசேட ஆணைக்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, 1947 இல் 26ஆம் இலக்க கட்டளைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இக்கட்டளைச்சட்டத்தின் VI ஆம் பிரிவு தோட்டப்பாடசாலைக்கான கட்டடம், ஆசிரியர்களுக்கான விடுதி, பாடசாலைத் தோட்டம் தொடர்பான விடயங்கள் உள்ளடங்கியிருந்தன. எனினும் தோட்டப்பாடசாலை பிள்ளைகளது கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கு "தேர்ச்சிமிக்க ஆசிரியர்களை நியமித்தல்" தொடர்பாக எதுவும் குறிப்பிடப் படாமை தொடர்ந்து அனைத்து கல்விக் கட்டளைச்சட்டங்களிலும் காணப்படும் ஒரு குறைபாடாகும் என ஞானமுத்து (1976:44) சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வியின் மீதான விசேட ஆணைக்குழு அறிக்கையின் அடிப்படையில், 1945 இல் இலவசக்கல்வி அறிமுகம் செய்யப் பட்டது. 1960 ஆம் ஆண்டு 5ஆம் இலக்க மற்றும் 1961 ஆம் ஆண்டு 8 ஆம் இலக்க சட்டங்களினூடாக உதவி நன்கொடை

பெறும் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்டன. இதன்படி சகல உதவி நன்கொடை பெற்ற பாடசாலைகள், அவற்றில் கற்பித்த ஆசிரியர்கள் அரச நிருவாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர். ஆனால் இதுவரை காலமும் உதவி நன்கொடை பெற்று வந்த தோட்டப் பாடசாலைகளோ, அங்கு கற்பித்த ஆசிரியர்களோ இத்திட்டத்தினுள் கொண்டுவரப்படவில்லை (ஞானமுத்து 1976:51-52).

தோட்டப் பாடசாலைகள் தொடர்பில் அரசின் தலையீடு பற்றி ஜெயசூரியா ஆணைக்குழு அறிக்கை *(1962)* பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றது.

> "*1939-1968* வரையான காலம் இலங்கையின் கல்வி அபிவிருத் தியில் மிகவும் வேகமாகப் பல மாற்றங்கள் இடம்பெற்ற காலப் பகுதியாகும். எனினும் இக்காலப்பகுதியில் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கங்களும் கல்வி அமைச்சர்களும், *1947* ஆம் ஆண்டு கட்டளைச் சட்டத்தில், தோட்டத் தொழிலாளர்களது கல்வி தொடர்பாக குறிப்பிட்டுள்ள விடயங்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக எவ்விதமான அக்கறையினையும் செலுத்தவில்லை."
>
> (ஜெயசூரியா ஆணைக்குழு அறிக்கை 1962)

இதனை *1960* ஆம் ஆண்டு பாடசாலை செல்லாத மாணவர்களின் நிலைமை பற்றி ஆராய்ந்த குழுவின் அறிக்கை உறுதிப்படுத்து கின்றது (Report of the Committee of Non-School going Children). இவ் வறிக்கையின்படி *1958* ஆம் ஆண்டில் *5-14* வயதுக்குட்பட்ட *284,000* தோட்ட மாணவர்களுள் *152,000* பேர் பாடசாலை களுக்குச் சென்றனர். *132,000* பேர் பாடசாலைக்குச் செல்ல வில்லை. *53* சதவீதமானோர் பாடசாலைகளுக்குச் செல்ல *47* சதவீதமானவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. இந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பெருந்தோட்டப் பாடசாலைகளின் நிலைமை தொடர்பாக, பிரதிநிதிகள் சபையில் *1960* இல் அப்போதைய கல்வி அமைச்சர் W.தகநாயக்க பின்வரும் கருத்துக்களை முன்வைத்தமையினையும் பத்மநாபா (1988:50–51) என்பவர் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

"பாடசாலைகளுக்குச் செல்கின்ற 53 சதவீதமான தோட்ட மாணவர்கள் 900 தோட்டப்பாடசாலைகளுக்கே செல்கின்றனர். இப்பாடசாலைகளில் 5 ஆம் வகுப்பு வரையுமே கற்பிக்கப்படு கின்றன. இவற்றில் பயிற்றப்படாத ஆசிரியர்கள் குறைந்த சம்பளத் துடன் கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர். தளபாடப் பற்றாக்குறை காணப்படுகின்றது. தோட்டப் பாடசாலைகளின் இத்தகைய நிலைமைகளினால் நாம் தலைக்குனிய வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. இதனால் எந்த அரசாங்கமாக இருப்பினும் தோட்ட மாணவரின் கல்வி பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியம்".

பெருந்தோட்டப்புறப் பாடசாலைகளின் ஆசிரியர்களது நிலைமை இவ்வாறு இருக்கையில், 1970 ஆம் ஆண்டு மலையக வேலையற்ற பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியல் ஒன்று மலையக மக்களின் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த A.அஸீஸ் அவர்களின் ஊடாக கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இப்பட்டியல் அப்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையில் போதனாசிரியராக கடமையாற்றிய M.வாமதேவன் அவர்களால் தயாரிக்கப்பட்டு அப்போது கல்வி அமைச்சில் பெருந்தோட்டப் பாடசாலைகள் பிரிவில் பொறுப்பாளராக கடமையாற்றிய அமரர். இர.சிவலிங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பட்டியலில் 21 பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. இவர்களில் 13 மலையகப் பட்டதாரிகளுக்கு முதன் முறையாக ஆசிரியர் நியமனம் வழங்கப் பட்டது. இவ்வாறு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட போதிலும் அவர்களில் மூன்று பேரைத்தவிர ஏனைய 10 பேரும் மலையகத்திற்கு வெளியேயான மாவட்டங்களில் நியமிக்கப்பட்டனர் என வாமதேவன் (2014) சுட்டிக்காட்டியுள்ளார். இது ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய போதிலும் மலையகம் சார்ந்த பட்டதாரிகளின் சேவையை பெருந்தோட்டப்புற மாணவர்களால் பெற்றுக் கொள்ள முடியாது போயுள்ளமையை வெளிக்காட்டுகின்றது.

தோட்டப் பாடசாலைகள் 1970களின் இறுதிவரை தோட்ட உரிமையாளர்களுக்கே சொந்தமாக இருந்தன. கட்டிடம், ஆசிரியர் நியமனம், தளபாடம் என்பவற்றுக்கு இவர்களே பொறுப்பாக

இருந்தனர். 1977 ஆம் ஆண்டிலே இடம்பெற்ற இனக்கலவரம் தோட்டப் பாடசாலைகளின் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்தது. அங்கு சென்று போதிக்கத் தகுந்த ஆசிரியர் கிடைப்பது அரிதா யிற்று. சுதந்திரத்தின் முன்னர் கண்துடைப்புக்காகவேனும் ஆங்கிலேயர் சில சீர்த்திருத்தங்களை மேற்கொண்டனர். ஆனால் சுதந்திரத்தின் பின்னர் தோட்டப்புற பாடசாலைகளின் கல்வியில் ஒரு வீழ்ச்சி நிலையே தென்பட்டது (பத்மநாபா 1988).

1970களின் நடுப்பகுதியில் தோட்டப் பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்கள் தொடர்பாக ஞானமுத்து (1977:59) பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

தோட்டப்பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் ஏனைய பாடசாலைகளை விட உயர்வாக காணப்பட்டது. தோட்டப் பாடசாலைகளில் 64:1 எனவும் அரசாங்கப் பாடசாலை களில் இது 24:1 எனவும் காணப்பட்டது. மேலும் தனியொரு ஆசிரியர் 1-5 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த 50 தொடக்கம் 100 வரையான மாணவர்களுக்கு 2-2.5 மணித்தியாலங்கள் தனி யொரு அமர்வாக வைத்துக் கற்பிக்க வேண்டிய நிலை காணப் பட்டது. இக்குறிப்பிட்ட ஆசிரியர் மாலை நேரத்தில் இன்னுமொரு தோட்டப்பாடசாலையில் இதேயளவு கற்பித்தலில் ஈடுபட வேண்டிய நிலைமையும் காணப்பட்டது. தனியொரு ஆசிரியர் விடுமுறையில் செல்லும் போது, இடமாற்றம் மற்றும் இறப்பின் போது பாடசாலையை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் தோட்டங்கள் அரசினால் பொறுப்பேற்கப் பட்டன. ஆனால் தோட்டப் பாடசாலைகளோ, ஆசிரியர்களோ அரசினால் பொறுப்பேற்கப்படவில்லை. இதனால் 1975 - 1980 வரையான காலப்பகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை, நிர்வாகச் சீர்குலைவு, ஆசிரியர் வரவு கணிசமாக குறைந்தமை போன்ற நிலைமைகளால் தோட்டப்பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப் பட்டன. இத்தகைய நிலைமையை 1970களின் நடுப்பகுதியில் பெருந்தோட்டப்பாடசாலைகளில் காணப்பட்ட ஆசிரியர்

மாணவர் விகிதம் உறுதிசெய்கின்றது. இதனை அட்டவணை 2 காட்டுகின்றது (பொருளியல் நோக்கு, 1980 மார்ச்சு).

அட்டவணை 2 : 1970களில் தோட்டப்பாடசாலை ஆசிரியர் களின் எண்ணிக்கை விபரம்

| ஆண்டு | மொத்த பாடசாலைகள் | மாணவர் தொகை | ஆசிரியர் தொகை | மாணவர் ஆசிரியர் விகிதம் |
|---|---|---|---|---|
| 1973 | 774 | 74,376 | 1219 | 40.8 |
| 1974 | 770 | 62,517 | | |
| 1975 | 720 | 58,614 | 1105 | 53 |
| 1976 | 725 | 50,816 | 984 | 52 |

மூலம்: பொருளியல் நோக்கு (1980, மார்ச்சு)

தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டதன் பின்னர் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக அரசின் கவனத்திற்கு தொழிற் சங்கங்கள் கொண்டு வந்தன. இதன் பயனாக பெருந்தோட்டப் புறங்களில் காணப்பட்ட நகர்புற தமிழ் பாடசாலைகளுக்கு 1976 ஆம் ஆண்டு 50 பெருந்தோட்டப்புற இளைஞர், யுவதிகள் ஆசிரியர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். அப்போதைய பிரதி கல்வி அமைச்சர் B.Y. துடாவை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இவர்கள் மாத்தளை, கண்டி, ஹப்புத்தளை ஆகிய நகர்ப்புறப் பாடசாலைகளில் அமர்த்தப்பட்டனர் (நடேசன், 1993).

எனவே 1870 கள் தொடக்கம் 1900 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதிவரை கங்காணிமார்களும், தோட்டத்தின் அலுவலகங்களில் கடமையாற்றிய எழுதுவினைஞர்களும், இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட தராதரப்பத்திரம் அற்ற தென் இந்தியர்களும் தோட்ட நிருவாகங்களால் ஆசிரியர்களாக அமர்த்தப்பட்ட நிலைமை காணப்பட்டது. தொடர்ந்து 1970 ஆம் ஆண்டுகளின் பின் அரைப்பகுதியிலும் படிப்படியாக இலங்கையின் வட- கிழக்கு மற்றும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் குறைந்த தகைமையுடன், எதுவிதமான கற்பித்தல் பயிற்சியும் பெற்றிராதவர்கள் தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டிருந்தனர்.

இதன்படி பெருந்தோட்டப்புறப் பாடசாலைகளின் ஆரம்பக்காலம் முதல் 1970 களின் இறுதிவரை தகைமைக் குறைந்தவர்கள் ஆசிரியர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு அமர்த்துகை செயற் பட்டிருந்த நிலைமை காணப்பட்டு வந்துள்ளது.

**பெருந்தோட்டப் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட காலத்தின் ஆசிரியர்கள் – 1970கள் – 1980கள் வரை**

பெருந்தோட்டப்புறப் பாடசாலைகளில் அனைத்தும் 1971 தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரசினால் பொறுப்பேற்கப்பட்டன. அதன்படி 1977 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 304 பாடசாலைகளும், 1980 வரை யான காலப்பகுதிவரையில் 346 பாடசாலைகளும் 1989 வரையான காலப்பகுதி வரையில் 68 பாடசாலைகளும் என சகல தோட்டப் பாடசாலைகளும் பொறுப்பேற்கப்பட்டன. (பெருந்தோட்டப் பாடசாலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, 1998).

1980களின் ஆரம்பத்தில் தோட்டப்பாடசாலைகள் அரசாங் கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட போது தோட்டப் பாடசாலை களில் தொழில் புரிந்த ஆசிரியர்கள் தொடர்பாக சிவசிதம்பரம் மற்றும் பீரிஸ் (1994) போன்றோர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

> "பெரும்பாலான தோட்டப் பாடசாலைகள் ஓராசிரியர் பாட சாலைகளாகவே காணப்பட்டன. ஆசிரியர் மாணவர் விகிதம் 1:100 ஆக இருந்தது. அதிகமான ஆசிரியர்கள் SSC அல்லது GCE (O/L) வரையிலான கல்வித்தகைமையினையே பெற்றிந்தனர். அவர்கள் கற்பித்தல் தொடர்பாக எவ்வித பயிற்சியினையும் பெற்றிருக்கவில்லை. வாசிப்பு, எழுத்து மற்றும் எண் போன் றனவே இவர்களால் கற்பிக்கப்பட்டன".

சுதந்திரத்திற்கு பின்னர் அரசாங்கங்கள், தோட்டப்பாடசாலை களை பொறுப்பேற்கவோ, அல்லது போதிய ஆசிரியர்களை நியமிக்கவோ முன்வரவில்லை. இதனால் ஏற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர்கள் இருப்பினும் அவர்களின் அக்கறை யின்மை அருகாமையில் அமைந்துள்ள மாணவர் எண்ணிக்கை குறைவான பாடசாலைகளை இணைந்து (Amalgamation) இயங்கக்

கூடியதாக பாடசாலைகள் மறுசீரமைக்கப்பட்டமை போன்ற காரணங்களால் தோட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை குறைவடைந்து சென்றது. இது அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 3 : தோட்டப்பாடசாலைகளின் எண்ணிக்கை வீழ்ச்சி விபரம்

| வருடம் | பாடசாலைகளின் தொகை | வருடம் | பாடசாலைகளின் தொகை |
|---|---|---|---|
| 1948 | 993 | 1974 | 768 |
| 1968 | 968 | 1976 | 725 |
| 1971 | 875 | 1981 | 639 |
| 1973 | 774 | | |

மூலம் : பத்மநாபா (1988:61)

அட்டவணை 3 இன்படி 1971 ஆம் ஆண்டுவரை 218 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. 1977 - 1981 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 86 பாடசாலைகள் மூடப்பட்டன. 73 பாடசாலைகள் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால் தற்காலிகமாக மூடப்பட்டன. இங்கு கற்பித்த ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்ற பின்னர் அவர்களுக்குப் பதிலாக ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை (பத்மநாபா 1988:61).

1980களில் பெருந்தோட்டப் பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பான விபரங்களை லிட்டில் (2002:295) பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார். இதன்படி 1982 இல் பதுளை மாவட்டத்தில் 109 பாடசாலைகள் அரசினால் பொறுப் பேற்கப் பட்டன. இவற்றில் 107 பாடசாலைகள் 1-5 வரையான வகுப்பு களைக் கொண்டவையாகும். இதில் 77 பாடசாலைகள் ஓராசிரியர் பாடசாலைகளாகவும் காணப்பட்டன. இப்பாடசாலைகளில் 11,569 மாணவர்களும் 169 ஆசிரியர்களும் காணப்பட்ட நிலையில், ஆசிரியர் மாணவர் விகிதம் 1:68 ஆக இருந்தது. இவற்றில் 21 ஓராசிரியர் பாடசாலைகளில் அதாவது 28 சதவீதமானவற்றில் 100 இற்கும் அதிகமான மாணவர்களும் 25 பாடசாலைகளில் அதாவது 32 வீதமானவற்றில் 70-99

வரையான மாணவர்களும் ஒரு பாடசாலையில் 225 மாணவர்களும் இருந்தனர். இது பெருந் தோட்டப்புறப் பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர் பற்றாக் குறையின் தீவிரத் தன்மையைக் காட்டுகின்றது.

தோட்டப்பாடசாலைகள் பெரும்பாலானவை 1980 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டபோது அவை ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுடனேயே பொறுப்பேற்கப் பட்டன. இந்தநிலையில் இப்பாடசாலைகளில் பெரும்பாலா னவை தொண்டர் ஆசிரியர்களை கொண்டே இயங்கிவந்தன. இது தொடர்பாக லிட்டில் (2002:296) பின்வருமாறு குறிப்பிட் டுள்ளார்.

"1977 - 1983 காலப்பகுதியில் தோட்டப் பாடசாலைகளின் முகாமைத்துவத்திற்கு பெறக்கூடிய எந்தவொரு மேலதிக உதவியும் தேடிப்பெற வேண்டியதாக இருந்தன. அச்சமயம் அதிகளவில் தொண்டர் ஆசிரியர்கள் இருந்தனர். பல பாடசாலைகள் தொண்டர் ஆசிரியர்களைக் கொண்டே இயங்கின".

இத்தகைய தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பாக நடேசன் (1993:299:300) என்பவர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

"1977 இல் பெருந்தோட்டப் பாடசாலைகளில் நிலவிய வெற்றிடங்களுக்காக 100 ஆசிரியர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. விண்ணப்பிக்கும் போது ஏற்கனவே தொண்டர் ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என கூறப்பட்டது. இந்த நிபந்தனை புறக்கணிக்கப்பட்டு வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 86 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து அட்டனில் பாதிக்கப்பட்டவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்".

இவ்வாறாக ஆசிரியர் இல்லாமை காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டமை, ஆசிரியர் மாணவர் விகிதம் உயர்வாக காணப் பட்டமை, பல பாடசாலைகள் தொண்டர் ஆசிரியர்களை கொண்டே இயங்கியமை போன்ற நிலைமைகள் 1980 களின் ஆரம்பத்தில் பெருந்தோட்ட பாடசாலை ஆசிரியர்கள் தொடர்பாக

நிலவிய பிரச்சினைகளாகும். இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக 402 ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

இதன்படி 1983 ஆம் ஆண்டு பெருந்தோட்டப் பாடசாலைகளுக்காக மாவட்ட சேவையின் கீழ் "தோட்டப்பிரதேச பாடசாலைகளில் உதவி ஆசிரியர் பதவி நியமனம்" என்னும் நியமனத்தின் கீழ் 402 ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு பெருந்தோட்டப் பாடசாலைகளில் அமர்த்தப்படனர். இந்த ஆசிரியர் நியமனம் தேசிய ரீதியாக ஆசிரியராக வருவதற்குத் தேவையான க.பொ.த உயர்தரம் என்னும் குறைந்தபட்ச தகைமையை, க.பொ.த சாதாரணதரம் என தகைமையை குறைத்து, பெருந்தோட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு விஷேட சலுகையின் அடிப்படையில் வழங்கப்பட்டதாகும்.

அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தித் தேவைகள் தொடர்பாக கண்டறிவதற்காக கல்வி அமைச்சு 1985 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மேற்கொண்ட ஆய்வில், பெருந்தோட்டப்புற ஆசிரியர்கள் தொடர்பாக பின்வரும் பிரச்சினைகள் நிலவியதாக இவ்வாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (PSEDP, 1996).

1. தராதரமற்ற, தேர்ச்சி பெறாத ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றமை
2. பெருந்தோட்டப் பாடசாலைகளில் நிரந்தரமாக கடமையாற்றுவதில் விருப்பம் குறைந்த ஆசிரியர்கள் இருத்தல்
3. ஆசிரியர்களுக்கான மேற்பார்வை, உதவிச்சேவை போதுமானளவு கிடைக்காமை
4. ஆசிரியர்கள் கலைத்திட்டத்தை உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பு குறைவாக காணப்பட்டமை
5. ஆசிரியர் பற்றாக்குறை

இந்த காலப்பகுதியில் பெருந்தோட்டப்புற பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக Swedish International Develeopment

Cooperation Agency எனப்படும் SIDA திட்டத்தின் நிதியளிப்புடன் *1986* ஆம் ஆண்டு PSEDP எனப்படும் பெருந்தோட்டப் பாட சாலைகள் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் "ஆரம்பக்கல்வியில் தரவிருத்தி, ஆசிரியர் வழங்கல் என்னும் செயற்றிட்டத்தின் கீழ் பெருந்தோட்டப்புற பாடசாலைகளுக்கான விஷேட ஆசிரியர் ஆட்சேர்ப்புத்திட்டம் ஒன்று Plantation Sector Teacher Programme - (PSTP) என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

*1981* ஆம் ஆண்டு "கல்வி வெள்ளையறிக்கை" என்னும் பெயரிலான கல்விச்சீர்திருத்தத்திற்கு அமைவாக, ஆசிரியர் ஆட்சேர்ப்பிற்கான ஆகக் குறைந்தபட்ச தகைமை க.பொ.த உயர்தரம் என்பது முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும் பெருந் தோட்டப் பிரதேசங்களில் போதுமானளவு க.பொ.த உயர்தர தகைமையைப் பெற்றவர்கள் இருக்காமையினால் PSTP ஆசிரியர் ஆட்சேர்ப்பிற்காக க.பொ.த சாதாரணத் தரத்தில் 6 பாடங்களில் சித்தியெய்தியவர்கள் போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் நியமனம் பெறுவதற்கு முன்னர் ஒரு வருட கால விஷேட சேவை-முன் பயிற்சியின் ஊடாக கற்பித்தல் அனுபவம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. பயிற்சி யின் பின்னர் நடத்தப்பட்ட இறுதிப்பரீட்சையில் சித்தி யெய்திய வர்கள் பெருந்தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியராக நியமிக்கப் பட்டதோடு முறையான பயிற்சியின் பின்னர் ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும் என கேட்கப்பட்டனர். இவ்வாறு PSTP திட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட பெருந் தோட்டப்புற பாடசாலைகளுக்கான ஆசிரியர்கள் விபரத்தினை அட்டவணை *4* காட்டுகின்றது (லிட்டில், 2002).

அட்டவணை 4 PSTP திட்டத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர் விபரம்

| இல | வருடம் | எண்ணிக்கை | நியமன இழப்பு |
|---|---|---|---|
| *01* | *1986/87526* | *526* | *474* |
| *02* | *1987/88832* | *832* | *168* |
| *03* | *1988/89* | *694* | *306* |
| | மொத்தம் | *2052* | *948* |

*மூலம்: லிட்டில், 2002.*

*1986* ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட பெருந்தோட்ட பிரதேசங்களுக்கான ஆசிரியர் நிகழ்ச்சித்திட்டம் (PSTP) நடைமுறையில் எதிர்நோக்கிய பிரச்சினைகளை பின்வருமாறு லிட்டில் *(2002:302)* என்பவர் முன்வைத்துள்ளார்

1. ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அமைச்சின் அங்கீகாரத்திற்கும் பாடசாலைகளிலே ஆசிரியர்களை அமர்த்தலுக்கும் இடையேயான கால இடைவெளி *3* வருடங்கள் வரை நீடித்திருந்தமை
2. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் தொகைக்கும் பாடசாலைகளில் நியமனம் செய்யப்பட்டவர்களது தொகைக்கும் இடையே வேறுபாடு நிலவியமை
3. ஆட்சேர்ப்பு, தெரிவு ஆகிய கட்டங்களுக்கான பிரமாணங்களை தெரிவு செய்வதில் சிக்கல்கள் காணப்பட்டன.

1980களின் இறுதிவரைக்கும் பெருந்தோட்டப்புற பாடசாலைகளில் ஆசிரியர் ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகை தொடர்புப்பட்ட பிரச்சினைகளாக பின்வருவனவற்றை பத்மநாபா(1988), நடேசன் (1993) போன்றோர் முன்வைத்துள்ளார்கள்.

I. ஆசிரியர் இயலுமை, ஆசிரியர்களுக்குரிய வசதிகள், சலுகைகள் இன்மை, ஆசிரியர்களது கவனயீனம்

II. ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக தகுதியற்றவர்கள் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுகின்றமை

III. வசதியற்ற பாடசாலைகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தளபாட வசதி குறைவு, வேலைத் தொல்லை என்பன காரணமாக இப்பிரதேச நியமனத்தை விரும்பி ஏற்றுக்கொள்ளாமை

4. தங்குமிட வசதிகள், விடுதிகளுக்கு மலசலகூடம், மின்சார வசதிகள் இல்லாமை இதனால் பெற்றோர்கள் பிள்ளைகள் மத்தியில் அந்தஸ்துப் பிரச்சினை ஏற்பட்டமை

5. தகைமை பெற்ற ஆசிரியர்கள் தோட்ட அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க விரும்பாமை

6. ஓராசிரியர் பாடசாலைகள், ஏறத்தாழ 100 இற்கும் மேலானவர் களை ஒரே வகுப்பறையில் வைத்து பல்தரக் கற்பித்தல் செய்ய வேண்டிய நிலைமை

7. ஆசிரியர் பதவியை பெறுவதற்கான ஒரு வழிமுறையாக பெருந்தோட்டப்பாடசாலை நியமனங்களை கருதுகின்றமை யினால் நியமனத்தின் பின்னர் ஓரிரு வருடங்கள் இங்கு கடமையாற்றி விட்டுச் சொந்த ஊருக்கு மாற்றம் பெற்று செல்கின்றமை

8. இயல்பாக மூடப்பட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரி யர்கள் பாடசாலைகளை நடத்திச் செல்கின்றமை

1980களில் பெரும்பாலான தோட்டப்பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டமையினால், தேசிய ரீதியாலான ஆசிரியர் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் ஊடாகவும் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அந்த வகையில் 1989 இல் ஜனசவிய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 25,000 பயிலுநர் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் 500 ஆசிரியர்கள் பெருந்தோட்டப்புறப் பாடசா லைகளுக்கு நியமிக்கப்பட்டனர் (PSEDP Project Completion Report, 1985-1988). இந்த நியமனம் க.பொ.த உயர்தரம் சித்திப் பெற்ற வர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என நிபந்தனைக்குட்பட்ட போதிலும் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், அழகியல், சமயம்

மற்றும் உடற்கல்வி போன்ற பாடங்களுக்கு க.பொ.த சாதாரணதர சித்தியுடன் உரிய பாடத்தில் திறமை சித்தியைப் பெற்றுக் கொண் டவர்களும் பயிலுநர் ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (கொடிதுவக்கு மற்றும் அபேரட்ன 1990).

1977-1990 காலப்பகுதியில் பெருந்தோட்டப்புற பாடசாலைகள் அனைத்தும் அரசினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டன. இதன் காரணமாக அப்பாடசாலைகளுக்கான விசேட ஆசிரியர் ஆட்சேர்ப்புத்திட்டங்களான 402 ஆசிரியர்கள், PSTP ஆசிரியர் ஆட்சேர்ப்புத் திட்டங்கள், ஜனசவிய ஆசிரியர் நியமனம் போன்ற ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மூலம் பெருந்தோட்டப் பாடசாலை களுக்கு ஆசிரியர்கள் அமர்த்துகை செய்யப்பட்டனர். இந்த நியமனங்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ளவர்க ளுக்கு வழங்கப்படும் தகைமைகளைவிட குறைவான க.பொ.த சாதாரணதர தகைமைகளுடன் வழங்கப்பட்டன.

**தற்கால ஆசிரியர்கள் – 1990கள் தொடக்கம் இன்று வரை**

1980 களில் பெருந்தோட்டப் பாடசாலைகள் அரசினால் பொறுப் பேற்கப்படும் போது அப்பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களில் பெருமளவினர் பயிற்றப்படாதவர்களாகவே காணப்பட்டனர். இது தொடர்பாக தனராஜ் (2008:80) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "தோட்டப் பாடசாலைகளில் 10 ஆண்டுகள் சேவை புரிந்த ஆசிரியர்கள் ஆசிரியர் கலாசாலைக்கு பயிற்சிக்காக செல்லக்கூடிய வாய்ப்பு வழங்கப்படினும் அச்சந்தர்ப்பத்தை பலர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஏனெனில் பயிற்சிக் காலத்தில் சம்பளம் வழங்கப்படாமை, பாடசாலையில் பதிற்கடமைப் புரிந்தவர்க ளுக்கு ஆசிரியரே சம்பளம் வழங்க வேண்டியிருந்தமை, பயிற்சி யின் பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தினை பெற்றுக் கொடுக்கவேண்டிய நிலைமையினால் தோட்ட நிருவாகங்கள் பயிற்சி பெறுவதற்கு அனுமதிக்காமை போன்ற காரணங்களாகும்".

இவ்வாறு 1990 களின் ஆரம்பத்தில் சிங்கள மொழிப் பாட சாலைகள், முஸ்லிம் பாடசாலைகள் என்பவற்றில் பயிற்றப்படாத வர்கள் முறையே 32, 27 சதவீதத்தினராக காணப்பட்டனர். எனினும் இக்காலப்பகுதியில் பெருந்தோட்டப்பாடசாலைகளில் இது 65 சதவீதமாக காணப்பட்டது. இதனை அட்டவணை 5 காட்டுகின்றது (மாணிக்கம், 1995).

அட்டவணை 5 : 1990 களில் பெருந்தோட்டப் பாடசாலை களில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களது விபரம்.

| விபரம் | சிங்கள மொழி பாடசாலைகள் | முஸ்லிம் பாடசாலைகள் | தமிழ் பாடசாலைகள் |
|---|---|---|---|
| பெருந்தோட்ட மாவட்டங்களின் மொத்த ஆசிரியர்கள் | 46350 | 3268 | 4397 |
| பயிற்றப்படாத ஆசிரியர்கள் | 14697 | 871 | 2869 |
| பயிற்றப்படாத ஆசிரியர்கள் வீதம் | 31.7 | 26.6 | 65.2 |

மூலம் : Manikam (1995 : 55) Tea Plantation in Crisis.

இவ்வாறு பயிற்சிப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல் இருந்த ஆசிரியர்களுக்கு, பெருந்தோட்டப் பிரதேசங்களிலேயே பயிற்சியை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக் கும் முகமாக 1979 இல் பண்டாரவளை ஆசிரியர் கலாசாலையில் தமிழ்ப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இது பின்னர் 1980 ஆண்டு தலவாக்கலைக்கு மாற்றப்பட்டு தற்போது கொட்டக்கலையில் இயங்கி வருகின்றது. இந்த கொட்டக்கலை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களது விபரங்களை அட்டவணை 6 காட்டுகின்றது.

அட்டவணை 6: கொட்டக்கலை அரசினர் ஆசிரியர் கலா சாலையில் பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள் விபரம் (1979-2017)

| இல | பாடநெறி | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 1. | ஆரம்பக்கல்வி | 1974 | 58 |
| 2. | சமூகக்கல்வி | 177 | 05 |
| 3. | தமிழ்மொழி | 461 | 13 |
| 4. | விவசாயம் | 242 | 07 |
| 5. | மனைப்பொருளியல் | 23 | 01 |
| 6. | இரண்டாம் தேசிய மொழி | 56 | 02 |
| 7. | வழிகாட்டலும் ஆலோசனையும் | 36 | 01 |
| 8. | நடனம் (பரதம்) | 92 | 03 |
| 9. | இந்துசமயம் | 354 | 10 |
| | மொத்தம் | 3415 | 100 |

மூலம் : 31வது கலாசாலை தின சிறப்பிதழ் - 2010

இவ்வாறு பெருந்தோட்டப் பிரதேசத்தில் ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டமையானது, பெருந்தோட்டப் பிரதேசத்தில் ஒரு பயிற்சி பெற்ற ஆளணியினர் தொகுதியை அமர்த்துகை செய்வதற்குப் பங்களிப்புச் செய்தது.

இலங்கையில் 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிகள் சட்டத்தினால் ஆசிரியர் சேவை முன் பயிற்சியினை வழங்குவதற்காக, தேசிய கல்விக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு அமைவாக பெருந்தோட்டப் பிரதேச பாடசாலைகளுக்கு தேவையான ஆசிரியர் சேவை-முன் பயிற்சியை வழங்கும் நிறுவன மாக ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது தொகுதி மாணவர்கள் 1992 ஆம் ஆண்டு அனுமதிக்கப் பட்டனர் (மாணிக்கம், 1995:57).

ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு முதலாவது தொகுதி மாணவர்கள் தேசிய ரீதியிலான பிரமாணங்களுக்கு அமைவாக க.பொ.த உயர்தரத்தில் அதி விசேட சித்திகளைப் பெற்றுக்

கொண்டவர்களே தெரிவு செய்யப்பட்டனர். எனினும் உயர்ந்த மட்டத்திலான இந்த குறைந்தபட்ச தகைமைகளைப் பெற்ற பெருந்தோட்டப் பிள்ளைகள் ஒரு சிலரே இருந்தனர். முதல் தொகுதி மாணவர் 222 பேரில், பெருந்தோட்ட மாணவர்கள் 14 பேருக்கு மட்டுமே இந்தத் தகைமைகள் இருந்ததுடன், தமிழ் பேசுவோரில் கூடிய தொகையினராக முஸ்லிம் மாணவர்கள் இருந்தனர். இதனால் தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் அனுமதிக்கான தகைமைகள் குறைக்கப்பட்டன (லிட்டில், 2002:302).

இவ்வாறு பெருந்தோட்டப் பிரதேசங்களில் ஆசிரியர் ஆட்சேர்ப்பிற்கான போதுமானளவு குறைந்தபட்ச தகைமை பெற்றோர் இல்லாமையினை மூக்கையா (1997) பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

*"தேசிய மட்டத்தில் 25,000 ஆசிரியர்களை நியமனம் செய்வதற் காக 1990களில் விண்ணப்பம் கோரப்பட்டபோது, 350,000 விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இது 1:14 என்ற விகிதமாகும். ஆனால் பெருந்தோட்டங்களில் 1,000 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது 1,500 விண்ணப்பங்களே பெற்றுக் கொள்ளப்பட்டன. இது 1:1.5 என்ற விகிதமாகும். இந்த 1,500 விண்ணப்பங்களிலும் சில தேவையான தகைமைகளை கொண்டிருக்கவில்லை".*

1992 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரியில் இருந்து சேவை-முன் ஆசிரியர் பயிற்சி பெற்று வெளியேறிய ஆசிரிய மாணவர்களது விபரங்கள் அட்டவணை 7 இல் காட்டப் பட்டுள்ளன.

*அட்டவணை 7 : ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரியில் பயிற்றப் பட்டோர் விபரம் (1992-2018)*

| இல | பாடநெறி | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 1. | ஆரம்பக்கல்வி | 2000 | 56 |
| 2. | விஞ்ஞானம் | 272 | 8 |
| 3. | கணிதம் | 120 | 3 |
| 4. | கர்நாடக சங்கீதம் | 247 | 5 |
| 5. | பரதநாட்டியம் | 98 | 2 |
| 6. | சமூகக்கல்வி | 305 | 7 |
| 7. | முதன்மொழி தமிழ் | 287 | 6 |
| 8. | ICT | 206 | 5 |
| 9. | இரண்டாம் தேசிய மொழி | 04 | - |
| 10. | இந்து சமயம | 27 | 1 |
| 11. | சித்திரம் | 17 | |
| | மொத்தம் | 2918 | 100 |

*மூலம் : ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி மாணவர் அனுமதிப் பதிவேடு.*

அட்டவணை 7 இன்படி ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி ஆரம் பிக்கப்பட்டது தொடக்கம் இன்றுவரை பயிற்றுவிக்கப்பட்டுள்ள 2918 ஆசிரிய மாணவர்களில் 63 சதவீதமானோர் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாவர்.

பெருந்தோட்டப் பாடசாலைகளில் பாரியளவு பற்றாக்குறை நிலவும் விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களில் 11 சதவீத மான ஆசிரியர்களே பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான ஆசிரியர் தேவை களை நிறைவு செய்யும்போது பல்வேறு பிரச்சினைகள் எதிர் நோக்கப் படுகின்றன. அதில் பொருத்தமான தகைமையுடையோர் பற்றாக்குறையாக உள்ளமை பிரதானமானதாகும். பெருந் தோட்டப் பாடசாலைகளில் நிலவுகின்ற கவர்ச்சியற்ற நிலைமை காரணமாக தொடர்ந்து அங்கு சேவையாற்ற விரும்பாத நிலைமையும் காணப்படுகின்றது. வெளியிடங்களைச் சேர்ந்தோர்

குறுகிய காலத்தில் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றமையும், ஆசிரியர் தொழிலை பெற்றுக் கொள்வதற்கான ஒரு மார்க்கமாக தோட்டப்பாடசாலை ஆசிரியர் நியமனத்தை கருதுகின்ற நிலை மையும் காணப்படுகின்றது. இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு களைப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு, பெருந்தோட்டப் பிரதேசங் களை சேர்ந்தவர்களையே ஆசிரியர்களாக அப்பிரதேச பாடசாலை களுக்கு நியமிப்பதற்கு பொருத்தமான கொள்கைகள் கண்ட றியப்படல் வேண்டும் (மூக்கையா, 1997).

பெருந்தோட்டப்புறப் பாடசாலைகளுக்கு விசேட ஏற்பாடு களின் அடிப்படையில் *1997* ஆம் ஆண்டு, "தோட்டப்பகுதி அரசாங்க தோட்டப் பாடசாலைகளில் தமிழ்மொழிமூல தகுதி காண் ஆசிரியர் நியமனம்" ஒரு தொகுதியினருக்கு வழங்கப் பட்டுள்ளது. இவர்கள் *4* வருடங்கள் ஒரே பாடசாலையில் சேவையாற்றுதல் வேண்டும். க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதப் பாடம் சித்தியடையாதவர்கள் தகுதிகாண் காலப்பகுதியினுள் சித்தியடைதல் வேண்டும். பயிற்சியின் பின்னரும் தோட்டப் பாடசாலைகளில் மட்டுமே சேவையாற்றுதல் வேண்டும் போன்ற நிபந்தனைகளின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டார்கள்.

தேசிய ரீதியாகப் பார்க்கும்போது மொத்த ஆசிரியர்கள் மிகவும் மிகையாகவே காணப்படுகின்றனர். ஆனால் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், அழகியல் முதலிய ஆசிரியர்களின் அமைப்பு ரீதியான பற்றாக்குறை நாட்டின் பல இடங்களிலும் காணப்படுகின்றது. ஆசிரியர் பற்றாக்குறை மலையகப் பாட சாலைகளில் மிகவும் பாரதூரமான விடயமாகவே இன்றும் நிலவுகின்றது. அண்மையில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்ட போதும் தேசிய நிலைமையுடன் ஒப்பிடும்போது மலையகப் பாடசாலைகளின் ஆசிரியர் நிரம்பலில் குறிப்பிடக் கூடியளவு முன்னேற்றம் ஏற்படவில்லை - தனராஜ், 2008:84).

பெருந்தோட்டப் பாடசாலைகளில் விஞ்ஞான, கணித பாடங் களுக்கான ஆசிரியர்களின்மையும் தகுதி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையும் அதேவேளை, அவ்வாறு நியமிக்கப் பட்டாலும் அவர்களை சேவையில் தொடர்ந்து நிலைநிறுத்திக்

கொள்வதும் பெருந்தோட்ட சமூகம் முகங்கொடுக்கும் பாரிய பிரச்சினையாகும் (சந்திரபோஸ் மற்றும் சிவப்பிரகாசம் 2010:12).

மலையகத்தில் 2000 ஆண்டுகளின் ஆரம்பத்தில் ஏறத்தாள 8000 க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த இளைஞர் யுவதிகள் இருந்ததாக கணக்கெடுப்பு ஒன்றின் மூலம் கண்டறியப்பட்டிருந்தது. இவர்களில் 5000 பேருக்கு ஆசிரியர் நியமனமும் 3000 பேருக்கு அரச திணைக்களங்களில் முகாமைத்துவ உதவியாளர் நியமனமும் வழங்கப்படல் வேண்டும் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 2004 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்க பண்டார நாயக்க குமாரதுங்க அவர்களுடன் செய்துக் கொண்ட தேர்தல் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட கோரிக்கைகள் பலவற்றில் ஒன்றாக இருந்தது. இதற்கு அமைவாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானி பத்திரிகையின் ஊடாக 2005.07.01 ஆம் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டது. இந்த வர்த்தமானியில் இந்து சமயம், கிறிஸ்தவ சமயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இஸ்லாம் சமயம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகக் கூறி இதற்கு பின்னணியில் பிரபலமான அரசியல்வாதி இருந்தார் என கூறப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றினை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குத் தீர்ப்பிற்கு அமைவாக 600 முஸ்லீம்களை ஆசிரியர்களாக இணைத்துக் கொள்வதற்காக வர்த்தமானி அறிவித்தலில் திருத்தங்கள் செய்யப்பட்டதன் பின்னர் பெருந்தோட்டப்புற பாடசாலைகளுக்கு தெரிவுப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக 2008 ஆம் ஆண்டு 3179 பேர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டனர். இந்த நியமனம் "தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி முரண்பாடுகளை நீக்கி சமமான சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் தோட்டத்துறையில் அமைந்துள்ள பாடசாலை களுக்காக, "பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல்" என்னும் அடிப்படையில் வழங்கப்பட்டது. ஆகக்குறைந்தது 5 வருடங்கள் தோட்டத்துறை சார்ந்த பாடசாலை அமைந்திருக்கும் மாவட்டங்களில் நிரந்தர வதிவிடத்தை கொண்டவர்கள் குறித்த பாடசாலையில், குறித்த

பாடத்திற்கு நிலவிய வெற்றிடங்களின் அடிப்படையில், பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு நியமனம் வழங்கப்படும் தினத்தி லிருந்து பத்து வருடங்கள் குறித்த பாடசாலையில் சேவையாற்றுதல் வேண்டும் ஆகிய நிபந்தனைகளின், அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது.

இவ்வாறு பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட இந்த ஆசிரியர் நியமனத்திற்கான ஆகக் குறைந்தப் பட்ச தகைமை க.பொ.த. உயர்தரமாக குறிக்கப்பட்டது. எனினும் தேசிய மட்டத்தில் ஆசிரியர் ஆட்சேர்ப்பிற்கு விதிக்கப்படும் தகைமைகளோடு ஒப்பிடும்போது இந்நியமனத்திற்கான தகைமை தாழ்வானதாகவே காணப்பட்டது. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் ஏனைய பாடங்களான அழகியல், உடற்கல்வி போன்றவற்றுக்கு க.பொ.த. உயர்தரத்தில் ஏதாவது ஒரு பிரிவில் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் போன்ற உயர்தர பிரிவுகளை குறிக்கும்) சித்தி பெற்றிருப்பதோடு, க.பொ.த. சாதாரண தரத்தில் உரிய பாடத்தில் திறமைச் சித்தி பெற்றவர்கள், இக்குறிப்பிட்ட பாடங்களுக்கான ஆசிரியராக நியமிக்கப்பட்டனர். இது தேசிய மட்டத்தில் ஒரு விசேட பாடத்திற்கு ஆசியராக நியமனம் பெறுவதற்கு, அக்குறித்த விசேட பாடத்துடன் தொடர்பு பட்ட துறையில் க.பொ.த உயர்தர சித்தியை பெற்றிருத்தல் வேண்டும் என்னும் நிபந்தனையை புறக்கணித்து நியமனம் வழங்கப்பட்டிருத்தலைக் குறிக்கின்றது.

இந்தப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் ஆட்சேர்ப்பு முறையானது, பெருந்தோட்டப்புற பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக அமைந்த போதிலும் தகைமையுள்ள ஆசிரியர்களது தேவையினையும், அமைப்புரீதியான ஆசிரியர் பற்றாக்குறையினையும் நிவர்த்திப் பதில் போதிய பங்களிப்பினை நல்கவில்லை.

பெருந்தோட்டப்புறப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்திக்கும் நோக்குடன் 2013-12-16 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதற்கமைவாக பெருந்தோட்டத் தமிழ் மொழிமூலப் பாடசாலை

களில் பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்ட 3021 ஆசிரிய உதவியாளர்களுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் 2014-08-08 ஆம் திகதி வர்த்தமானியில் கோரப்பட்டன. இந்த நியமனம் போட்டிப்பரீட்சையின் அடிப்படையில் க.பொ.த. உயர்தரத்தில் ஏதாவதொரு பிரிவில் சித்தியடைந்தவர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கட்டம் கட்டமாக 2800 பேருக்கு ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொள்வதில் தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழர் முற்போக்கு முன்னணியைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் உள்ளடங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கு முக்கியமானது என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் தோட்ட அல்லது தோட்டப்பிரதேசங்களுக்கு அண்மித்து 10 வருடங்கள் தொடர்ச்சியாக வசித்து வருபவர்களாவர். மேலும் இவர்கள் 10 வருடங்களுக்கு எவ்வித இடமாற்றங்களும் பெற்றுக்கொள்ளாமல் நியமனப் பாடசாலைகளிலேயே சேவையாற்றுதல் வேண்டும். அத்துடன் ஐந்து வருட காலப்பகுதியினுள் ஆசிரிய பயிற்சியினை அல்லது பல்கலைக்கழகப் பட்டமொன்றினை நியமனப் பாடத்தில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இல்லையெனில் ஆசிரிய உதவி யாளர் நியமனம் இடைநிறுத்தப்படும். ஆகிய மூன்று முக்கியமான நிபந்தனைகளின் அடிப்படையில் ஆறாயிரம் ரூபா கொடுப்பனவுடன் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு பயிற்சியை அல்லது பட்டத்தினைப் பெற்றுக்கொள்ளும் திகதி தொடக்கம் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I என்னும் வகுப்பிற்கு உள்ளீர்க்கப்படு வார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரிய உதவியாளர் நியமனத்திற்கான ஆட்சேர்ப்பின்போது 3179 ஆசிரியர் நியமனத்தின் போது கோரப்பட்ட கல்வித்தகை மைகளே நிபந்தனைகளாக விதிக்கப்பட்டன. அதாவது கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நடனம், சங்கீதம், சித்திரம், தொழில் நுட்பம் போன்ற விசேட பாடங்களுக்கு க.பொ.த சாதாரணதரத்தில்

திறமைச் சித்தியைப் பெற்றுள்ளதோடு க.பொ.த. உயர்தரத்தில் ஏதாவதொரு பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்னும் தகைமையின் அடிப்படையிலேயே ஆட்சேர்ப்புச் செய்யப் பட்டனர்.

இதனால் கணிதம். விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம், அழகியல் போன்ற பாடங்களின் கற்பித்தலின் தரம் பாதிக்கப் படலாம். இலங்கையில் க.பொ.த. உயர்தரத் தகைமையோடு நேரடியாக ஆசிரியர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் இலங்கை ஆசிரிய சேவையின் 3-II வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்யும் நிலைமை காணப்படுகின்றது. ஆனால், இவர்கள் மாத்திரம் ரூபா ஆறாயிரம் கொடுப்பனவுடன் ஆசிரிய உதவியாளர் களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளமை பெருந்தோட்டப் புறங்களுக்கு இந்நியமனத்தில் பாகுபாடு காட்டப்பட்டுள்ள மையைச் சுட்டிக்காட்டுகின்றது. இந்த ஆசிரிய உதவியாளர்கள் தமது நியமனத்தை நிரந்தரமாக்கிக் கொள்வதற்கு விதிக்கபப ட்டுள்ள கட்டாய நிபந்தனையாக ஆசிரியப் பயிற்சி அல்லது பட்டத்தினைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது முக்கிய மானது ஆனால் நூலக விஞ்ஞானம், உடற்கல்வி, இரண்டாம் மொழி சிங்களம், விசேடகல்வி, ஆலோசனையும் வழிகாட்டலும், தகவல் தொழில்நுட்பம், சுகாதாரம் போன்ற பாடங்களில் பயிற்சி அல்லது பட்டத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன.

இலங்கையில் அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அமைவாக மாகாண சபைகள் தாபிக்கப்பட்டன. மாகாணக் கல்வியமைச்சிற்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக பல்கலைக்கழகப் பட்டதாரி களுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்க முடியும். இதற்கமைவாக பெருந்தோட்டப்புறப் பாடசாலைகள் அதிகமாகக் காணப்படும் மத்திய மாகாண சபையின் வரலாற்றில் முதல் தடவையாக 2017 ஆகஸ்ட் மாதமளவில் மத்திய மாகாணத்தில் நிலவுகின்ற தமிழ் மொழிமூல ஆசிரியர் ஆட்சேர்ப்பிற்கு அமைவாகப் 742 பல்கலைக் கழக பட்டதாரிகள் மத்திய மாகாணத்தில் உள்ள தமிழ்மொழி

மூலப் பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டனர். இந் நியமனமும் குறித்த முதல் நியமனப்பாடசாலையில் 10 வருடங்கள் கட்டாயம் எவ்வித இடமாற்றங்களும் இன்றி கடமையாற்றுதல் வேண்டும் என்னும் நிபந்தனையுடன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 742 ஆசிரியர்களில் அரைப்பங்கிற்கு மேற்பட்ட எண்ணிக்கையானவர்கள் முஸ்லீம்கள் என்பது கவனத்திற் கொள்ள வேண்டியதாகும்.

இதுவரை மலையக பெருந்தோட்டப் பாடசாலைகள் தோற்றம் பெற்றது தொடக்கம் இன்றைய காலகட்டம் வரை பெருந் தோட்டப்புறப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் பற்றிய வரலாறு தொடர்பாக நோக்கினோம். அந்தவகையில் பெருந்தோட்டப்புறப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் என்ற காரணி ஓர் இடர்நிறைந்த அம்சமாகவே இருக்கின்றது. இருந்த போதிலும் இன்று மலையத்தில் பயிற்றப்பட்ட ஓர் ஆசிரிய ஆளணியினர் உள்ளனர்.

இவர்கள் எவ்வாறு மலையக சமூக மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்யலாம் என்பது பற்றித் தொடர்ந்து வரும் பகுதியில் நோக்குவோம்.

**கல்விக்கான சமூக முதலீடாக ஆசிரியர்கள்**

பொருளியல் சார்ந்து நோக்கும்போது முதலீடு அல்லது மூலதனம் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக மனிதனால் உருவாக்கப்பட்டவைகளையும் உற்பத்தியின் போது துணையாகக் கொள்ளப்படுகின்றவைகளையும் குறித்து நிற்கின்றது. இவற்றில் குறிப்பாகக் கட்டடங்கள், இயந்திர தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் நிதி போன்றவை உள்ளடங்குகின்றன. இவற்றில் அதிக முக்கியத்துவம் பெறுவது நிதியாகும். ஆனால் கல்விக்கான சமூக மூலதனம் எனப்படுவது ஒரு சமூகவியல் சார்ந்த எண்ணக்கருவாகும். இது சமூகமொன்றின் வலையமைப் புக்குள்ளும் சமூகமொன்றில் காணப்படும் பல்வேறு வலையமைப் புக்களுக்கிடையிலும் (Within the Social networks and between the Social networks) தொடர்புகளைக் கொண்டதாகும் இதனை Lin (1999)

என்பவர் எதிர்பார்க்கப்படும் சாதகமான விளைவுகளையும், நன்மைகளையும் பெற்றுக்கொள்வதற்காக சமூகத்தில் நிலவுகின்ற தொடர்புறவுகளை (Social Relationship) முதலீடு செய்தலே கல்வியின் மீதான சமூகத்தின் மூலதனம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

Loury (1977) என்பவர் அபிவிருத்தியின் மீது முதலீடு செய்யப் படும் முதலீடுகளின் அளவில் கவனம் செலுத்தி தன்னுடைய முடிவுகளை முன்வைத்துள்ளனர். அதன்படி சமூகத்தின் வளங் களின் அளவு என்பது சமூகமொன்றின் பின்னணியில் தங்கி யுள்ளது. அதாவது குறித்த சமூகமொன்றின் கல்வி மட்டம் அச்சமூகத்தின் கல்வி அபிவிருத்தி மீதான சமூக மூலதனமாக அமைகின்றது. குறித்தவொரு சமூகத்தில் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை அல்லது சதவீதம் உயர்வானதாகக் காணப்படு கின்றபோது அச்சமூகம் தமது இளம் சிறார்களின் கல்வி மீது கூடுதலான கரிசனையைக் கொண்டிருக்கும். கல்விக்கான முக்கியத்துவம், ஊக்கல், வழிகாட்டல், ஆதரவு, வளங்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பன உயர்வானதாக இருக்கும். இந்த அம்சத்தினை நாம் எமது பெருந்தோட்டப்புற சமூகத்துடன் பொருத்திப் பார்ப்போமாயின் எமது சமூகத்தின் பெற்றோர்களின் பெரும்பாலானவர்கள் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்களாகவே காணப்படுகின்றனர். சமூகத்தின் இத்தகைய ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி மட்டம் இளஞ் சிறார்களின் கல்விக்கான போதுமானளவு ஆதரவினை அளிப் பதில் பங்களிப்பும் செய்வது குறைவான மட்டத்திலேயே காணப் படுகின்றது. இது பிள்ளைகளின் கல்விக்கான வழிகாட்டல், உதவிகள் என்பன பெற்றோர்களிடமிருந்து போதுமானளவு கிடைப்பதில் வரையறைகளை ஏற்படுத்துவதாக அமைகின்றது. இதனால் பெற்றோர்களுக்கான கல்வியூட்டல் (Perantal Education) இத்தகைய நிலைமையினை ஓரளவிற்காயினும் முன்னேற்றலாம். இதற்காக பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெற் றோர்கள் தமது பிள்ளைகளுக்கு கல்விக்கான ஆதரவினை அளிப் பதற்கான விழிப்புணர்வுகளை வழங்குவதற்கான நடவடிக்கை களைத் திட்டமிட்டு முன்னெடுக்க வேண்டும்.

கல்வி மீதான சமூகத்தின் மூலதனம் பற்றிப் பேசும் போது Coleman *(1988)* மற்றும் Doolani *(2009)* ஆகியோர் கல்விக்காக சமூகத்தில் காணப்படும் சமூக, பொருளாதார, கலாசார காரணிகள் சார்ந்த சூழல் உவப்பானதாக கிடைக்கப்பெறுகின்ற போது கல்வியில் சிறந்த சாதனைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளனர். அதாவது குறித்தவொரு சமூகத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்மை நிலவுகின்ற போது பாடசாலைக் கல்வியிலும் உயர்தரக் கல்வியிலும் சிறப்பான அடைவினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். சமூகம் கற்கும் சமூகமாகவும், சமூகத்தின் சகல நிறுவனங்களும் அமைப்புகளும் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படும்போது கல்வி கற்கும் அடைவு உயர்வானதாக இருக்கும். சமூகத்தின் அனைத்துத் தரப்பினருமே கல்வியைக் குவியப்படுத்தியதாகச் செயற்படுவர்.

சமூக, பொருளாதார மற்றும் கலாசாரச் சூழல் தொடர்பான கல்வி மீதான சமூகத்தின் மூலதனம் பெருந்தோட்டப்புற சமூகத்தில் எவ்வாறுள்ளது என்பதை நோக்க வேண்டும். இது இன்று வளர்ந்து வருகின்ற குழந்தைப் பருவத்திலேயே காணப்படுகின்றது எனக் கொள்ளலாம். சமய நிறுவனங்கள், அரசியல் மற்றும் தொழிற்சங்கங்கள், சமூகத் தொண்டு நிறுவனங்கள் அரச மற்றும் அரசு சாராத அமைப்புக்கள் என்பன தங்களது வருமானத்தில், உழைப்பில் பெருமளவினை ஓய்வு நேரப்பொழுது போக்குகள், களியாட்டங்கள் போன்றவற்றில் ஈடுபடுத்துகின்றன. இத்தகைய அம்சங்கள் பெரும்பாலான சந்தப்பங்களில் மாணவர்களின் வீட்டில் கற்கும் சூழலையும் பாடசாலையில் கற்கும் சூழலையும் பாதிப்பனவாக அமைகின்றன. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன என்பதைப் பெற்றோர்கள் மற்றும் சமூக அங்கத்தினர்கள் உணர வேண்டும். இத்தகைய சூழல் மாற்றியமைக்கப்பட வேண்டும். இவற்றுக்காக ஆசிரியர் மாணவர்களை கற்றல் கற்பித்தலின்பால் ஊக்குவித்தல் கற்றலுக்கான சாதனங்களை வழங்குதல், இலவச முன்னோடி உபகார வகுப்புகள், பரீட்சைக்கான கருத்தரங்குகள், முன்னோடி

மாதிரிப்பரீட்சைகளை நடாத்துதல் போன்ற செயற்பாடுகளில் சமூக, பொருளாதார, கலாசார காரணிகளை ஈடுபடுத்துவதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

சமூகத்தின் மிகச்சிறியதும், ஆரம்ப அலகும் குடும்பமாகும். குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் நிலவுகின்ற அந்நியோன்ய மான உறவு பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையிலான உறவு, குடும்ப உறுப்பினர்கள் கல்விக்கு அளிக்கின்ற முக்கியத்துவம் மற்றும் பெறுமானம் என்பன அக்குடும்பத்தின் சிறார்களின் கல்வி மீதான மூலதனமாக அமைகின்றது. குடும்ப உறுப்பினர்க ளுக்ககிடையில் நிலவுகின்ற உறவினைப் போன்றே குடும்பத்தின் கட்டமைப்பும் கல்விக்கான மூலதனமாக அமைகின்றது. குடும் பத்தில் தாய் தந்தையர்களுக்கிடையிலனதும் பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடையிலானதுமான பிணைப்பு பிள்ளை களின் கல்விக்கான மூலதனமாக அமைகின்றது. சிதைவுறாத கட்டுக்கோப்பான உயரிய விழுமியங்கள் மற்றும் நியமங்களை இறுக்கமாகப் பின்பற்றும் குடும்பங்களில் வாழ்கின்ற பிள்ளை களின் கல்வி வெற்றியளிப்பதனை எம்மால் பார்க்கக் கூடிய தாகவுள்ளது. இன்று உலகளாவிய அனைத்து சமூகங்களிலும் போன்றே பெருந்தோட்டப்புற சமூகத்திலும் குடும்ப உறவின் பண்புத்தரம், கட்டமைப்பு நலிவடைந்து வருகின்றது. பெற்றோரில் அதிகளவிலான தாய்மார் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழி லுக்காக புலம்பெயர்தல், கொழும்பு போன்ற நகர்ப்புறங்களுக்குத் தொழிலுக்காகச் செல்லுதல், தாய் தந்தையர் பிரிந்து வாழ்தல் போன்றவை பெருந்தோட்டப்புறச் சமூகத்திலும் இன்று குறிப்பிடத் தக்களவு அதிகரித்துள்ளன. மேலும் குடும்பத்தின் மூத்த உறுப்பி னர்கள் தொடர் தொலைக்காட்சி நாடகங்கள், சினிமா போன்ற வற்றுக்குக் கூடுதலான முக்கியத்துவம் அளிப்பதனால் குடும்பச் சூழலில் கல்விக்கான முக்கியத்துவம் குறைந்து வருகின்றது. இத்தகைய உதாரணங்கள் எவ்வாறு குடும்பச்சூழல் பெருந் தோட்டப்புறச் சமூகத்தின் கல்வி அடைவினைப் பாதிப்பதாக அமைகின்றது என்பதனை உறுதிப்படுத்துகின்றது. இதற்காகப் பெருந்தோட்டப்புற சமூகத்தைச் சார்ந்த பாடசாலை அதிபர்கள்,

ஆசிரியர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் இவை தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

ஒரு சமூகத்தின் கல்வி மீதான சமூக மூலதனத்தின் மற்று மொரு குறிகாட்டியாக அச்சமூகத்தில் காணப்படும் பாடசா லைகள், பல்கலைக்கழகங்கள் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் எண்ணிக்கை, அவற்றில் வழங்கப் படும் கல்வியின் தரம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன (Miekiewicz, 2011). இதன் அடிப்படையில் பெருந்தோட்டப்புற சமூகம் செறிவாக வாழ்கின்ற பிரதேசங்களில் பாடசாலைகளில் காணப்படும் பௌதீக வசதிகள், விஞ்ஞானக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய 1AB பாடசாலைகளின் பரம்பல், தொழினுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை, அவற்றில் கற்பிக்கப்படும் தமிழ் மொழி மூலமான பாடநெறிகள், இணைந்து கற்கும் மாணவர் களின் எண்ணிக்கை என்பன மிகவும் குறைவாகவே உள்ளன. பெருந்தோட்டப்புற சமூகத்திற்கான பல்கலைக்கழகம் ஒன்று கிடைக்கப்பெறாமை அச்சமூகம் சார்ந்த உயர்கல்வி கற்றவர்களின் தொகையிலும் தரத்திலும் மற்றுமல்லாமல் அச்சமூகம் சார்ந்த ஆய்வுகளும் கூட மிகவும் குறைவாகவே உள்ளன. இந்த அடிப்படையில் நோக்கும் போது மலையகப் பிரதேசங்களுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள மாவட்டங்களிலும் நாட்டின் தமிழ் மக்கள் செறிவாக வாழுகின்ற வட கிழக்கு மாவட்டங்க ளிலும் கல்வி நிறுவனங்களின் செறிவு அதிகமாக இருப்பதனால் அற்றில் இணைந்து கற்க வேண்டும் என்ற ஆர்வத்தினை அச் சமூகம் சார்ந்தவர்களுக்கு ஏற்படுத்துகின்றனவாக அமைகின்றன. இதனால் மலையக அரசியல் தலைவர்கள் பெருந்தோட்டப்புற மாவட்டங்களில் குறிப்பாக நுவரெலியா, பதுளை போன்ற மாவட்டங்களில் இச்சமூகம் சார்ந்த இளைஞர்கள் தொழிற்கல்வி மற்றும் உயர்கல்வியில் இணைந்து கற்பதற்கான கல்வி நிறுவனங் களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என ஆசிரியர் சமூகம் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். எனவே கல்விக்கான சமூகத்தின்

மூலதனம் என்பது பொருளியல் சார்ந்த கட்டடங்கள், சாதனங்கள் மற்றும் நிதி ரீதியான உதவித்தொகைகளை பெற்றுக்கொடுப்பது அல்ல. மாறாக கல்விக்கான பாரம்பரியத்தினை சமூகத்தினர் மத்தியில் கட்டியெழுப்புதலை குறித்து நிற்கின்றது. அந்த வகையில் சமூகத்தில் பெற்றோர்கள் மற்றும் வளர்ந்தோரின் கல்வி மீதான விழிப்புணர்வை மேம்படுத்தல், குடும்பம் மற்றும் சமூகத்தின் சகல மட்டங்களிலுமான நிறுவனங்களில் கற்றலுக்கான கலா சாரத்தினை கட்டியெழுப்புதல், கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடியதான அங்கத்தினர்களுக்ககிடையிலான உறவினதும் கட்ட மைப்பினதும் பண்புத்தரத்தினை மேம்படுத்துவதற்கான பெற் றோர் விழிப்புணர்வூட்டல்கள், பெருந்தோட்டப்புறப் பிரதேசங் களில் மேலும் பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி நிறுவனங்களைத் தாபித்தல் என்பவற்றினூடாகக் கல்விக்கான சமூக மூலதனத்தினைக் கட்டியெழுப்ப ஆசிரியர்கள் பங்களிப்புச் செய்யலாம்.

### ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த செயலாற்றுகை

பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் சவால் மிக்க இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஆசிரியர்கள் தமக்குள் பகிர்ந்து கொண்டுள்ள நம்பிக்கைகள் உதவும். ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வினையாற்றல் மிக்கதான பயன்பாடு (Collective Teacher Efficacy) மாணவர்களின் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் மிகப்பிரதானமானதுமான காரணியாகும். (Hattie, 2016) ஒருங்கிணைந்த ஆசிரியர் பயன்பாடு என்பது ஒரு பாடசாலையில் கடமையாற்றும் சகல ஆசிரயர்களும் மாணவர்களின் கல்வி அடைவு தொடர்பாகக் கொண்டுள்ள தொகுப்பான புலக்காட்சியாகும். ஒருங்கிணைந்த ஆசிரியர் பயன்பாடும் மாணவர்களின் கல்வி அடைவும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்ட இரண்டு மாறிகளாகும் என்பது ஆய்வுகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. மாணவர்களின் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்களின் சுய ஊக்கல் மற்றும் கற்றலின் மீதான கவனம் மாணவர்கள் கல்வி தொடர்பாகக் கொண்டுள்ள உறுதிப்பாடு மற்றும் ஈடுபாடு ஆகிய காரணிகளை

விட ஒருங்கிணைந்த ஆசிரியர் பயன்பாடு எனும் காரணி மூன்று மடங்கிற்கும் அதிகமான செல்வாக்கினைச் செலுத்தியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. மாணவர்களின் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்தும் வினையாற்றல் மிக்க ஆசிரியர் பயன்பாடு முற்றுமுழுதான பாடசாலையின் பங்களிப்பாகும். அது வீட்டுச் சூழலினதோ அல்லது மாணவர்களினதோ பங்களிப்பு அல்ல என (Hattie, 2012) என்பவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமை வாகவே கல்வி கற்பதற்கான உவப்பற்ற சமூக மற்றும் குடும்பச் சூழலில் பிறந்த பிள்ளைகளும் கல்வி அடைவில் சாதனைகளைப் பெற்றுள்ளனர். ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வினையாற்றல் மிக்க செயற்பாடுகள் மாணவர்களின் புகுமுகத் தேர்ச்சி மட்டம், வீட்டு மற்றும் குடும்பச் சூழல், பிள்ளைகளின் கல்வி மீதான பெற்றோரின் ஈடுபாடு என்பவற்றை விட உயரிய செல்வாக்கினை மாணவர்களின் கல்வி அடைவில் செலுத்தியுள்ளதாகக் கண்டறி யப்பட்டுள்ளது.

Bob Marzano's (2003) என்பவர் தொடர்ச்சியாக முப்பத்தைந்து ஆண்டுகள் மேற்கொண்ட அவதானிப்புப் பதிவுகளை பகுப்பாய்வு செய்து மிக உயர் மட்டத்தில் வினைத்திறன் மிக்க பெறுபேறு களைப் பெற்றுக்கொண்ட பாடசாலைகள் மாணவர்களின் வீட்டுச் சூழல் மற்றும் சமூகப் பின்புலம் சார்ந்த காரணிகளைப் புறந்தள்ளி சாதனைகள் படைத்தமைக்கு ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வினையாற்றல் மிக்க செயற்பாடுகள் (பயன்பாடு) பங்களிப்புச் செய்துள்ளன என்பதைக் கண்டறிந்துள்ளார். அதாவது ஆசிரியர் களின் ஒருங்கிணைந்த வினையாற்றல் மிக்க செயற்பாடுகள் மீது கொண்டுள்ள நம்பிக்கையானது பாடசாலைகளின் கல்விசார் வெற்றிகளில் கணிசமானளவு பங்களிப்பினை நல்கியுள்ளது.

பாடசாலைகள் உயர் கல்விசார் அடைவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வினையாற்றல் மிக்க செயற்பாடு முக்கியமானது. அவ்வாறான ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து வினையாற்றலுடன் செயற்படுவதற்கான வாய்ப்பு கள் வழங்கப்படுவது அவசியமாகும். இதற்காக மூன்று நிபந்த னைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். முதலாவதாக ஆசிரியர்

களினது ஈடுபாட்டினை மேம்படுத்துதல் வேண்டும். ஆசிரியர் களின் ஒருங்கிணைந்த வினையாற்றல் மிக்க செயலாற்றுகைக்கு தலைமைத்துவ வாய்ப்புகள் வழங்கப்படுதல் வேண்டும். ஒருங்கி ணைந்த வினையாற்றல் மிக்க ஆசிரியர் செயலாற்றுகை மற்றும் ஆசிரியர்களுக்கான தலைமைத்துவ வாய்ப்புகள் ஆகிய இரண்டு மாறிகளுக்கிடையில் மிக நெருங்கிய தொடர்புகள் நிலவுவதாக (Derrington & Anglle, 2013; Goddard, Knobloch, 2007) போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வினை யாற்றல் மிக்க செயலாற்றுகையை அதிகரிப்பதற்காக பாடசாலை களில் ஆசிரியர்கள் தலைமைத்துவ வகிபாகங்களை ஏற்றுக்கொள் வதற்கான அதிகாரங்களையும் வழங்குதல் வேண்டும். Sherri Lewis (2009) என்பவர் குறிப்பிட்டுள்ளமைக்கு அமைவாகப் பாடசாலை மட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான அதிகளவு சந்தர்ப்பங்களையும் சுயாதீனத்தையும் வழங்கும்போது அது சமூகம் சார்ந்த விடயங்களில் தீர்மானங்களை மேற்கொள்வ தற்கான உயர்ந்த அனுபவங்களை ஆசிரயர்களுக்குப் பெற்றுக் கொடுக்க உதவும். இதனால் பாடசாலை அதிபர்கள் பாடசாலைச் சுற்றாடல், கலைத்திட்ட நடைமுறைப்படுத்தல், தொழில்சார் விருத்தி, பெற்றோர்களின் ஈடுபாடு போன்றன தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதில் ஆசிரியர்கள் பங்குபற்று வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இத்தகைய செயற்பாடுகளில் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சுயாதீனம் அவர்களின் ஒருங்கிணைந்த வினைாயற்றல் மிக்க செயலாற்றுகையை மேம்படுத்தும்.

ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வினையாற்றல் மிக்க செய லாற்றுகையை மேம்படுத்துவதற்கான இரண்டாவது வழிமுறை யாக இலக்குகளைக் கட்டியெழுப்புதல் அமைகின்றது. பாடசாலை உட்பட எந்த ஒரு நிறுவனத்தினதும் வெற்றிக்குத் தெளிவானதொரு இலக்குத் தொகுதி இருப்பது முக்கியமானது. அளவிடக்கூடியதும் பொருத்தப்பாடு உடையதும் சவால்களை எதிர்கொள்வதற்கு உதவக்கூடியதுமான இலக்குகள் கல்வியியலாளர்கள் சிறந்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு பயனுள்ளதாக அமை

யும். இத்தகைய இலக்குகள் மூன்று நிபந்தனைகளை நிறைவு செய்திருத்தல் இன்றியமையாதது என Viviane Robinson மற்றும் அவரது குழுவினர் (2009) இனங்கண்டுள்ளனர். (1). இலக்குகளை அடைந்து கொள்வதற்கான இயலுமைகள் ஆசிரியர்களிடத்தில் காணப்படுதல் வேண்டும். (2). இலக்குகள் தெளிவாகவும் குறிப்பானதாகவும் இருத்தல் வேண்டும். (3). இலக்குகளை அடைந்து கொள்வதற்கான அர்ப்பணிப்பு ஆசிரியர்களிடத்தில் காணப்படல் வேண்டும் என்பன அவையாகும்.

இத்தகைய ஆய்வு ரீதியான சான்றாதாரங்களின் முடிவு யாதெனில் பாடசாலை மட்டத்திலான மாணவர்களின் கல்விசார் அடைவுகளின் வெற்றியில் பாடசாலையில் கடமை யாற்றும் சகல ஆசிரியர்களும் கூட்டுறவு அடிப்படையில் ஒத்து ழைத்துச் செயற்படுதல், மாணவர்கள் தொடர்பாகக் கொண்டுள்ள உயர் நம்பிக்கை போன்ற ஆசிரியர் சார்பான காரணிகள் மாணவர்களின் வீட்டு மற்றும் குடும்பச் சூழல் சார்ந்த காரணிகளை விடக் கூடுதலான செல்வாக்கினைச் செலுத்துகின்றது என்பதாகும். இதற்கமைவாக உலகில் பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்கின்ற பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்தவர்களின் மத்தியிலிருந்து சிறந்த கல்வியாளர்கள் அறிஞர்கள் தோற்றம் பெற்றுள்ளனர். இத்தகைய எடுத்துக்காட்டுக்கள் இலங்கையில் வாழும் பின்தங்கிய சமூகப் பிரிவினர்களில் ஒரு குழுவாகிய பெருந்தோட்டப்புறச் சமூகத்திலிருந்து கல்வியாளர்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் உயர்தொழில்சார் வல்லுனர்கள் தோற்றம் பெற்றுள்ளமைக்கும் பொருந்துவதாக அமைகின்றது.

பெருந்தோட்டப்புறப் பாடசாலைகளுக்காகக் கடந்த காலம் தொடக்கம் இன்றுவரை வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் நியமனங்களின்படி ஆசிரியர் எண்ணிக்கை பன்னிரண்டாயிரத்திலும் அதிகமாகும். இந்திய வம்சாவளித் தமிழர்களின் சனத்தொகையின் படி ஆசிரியர்களுக்கும் சனத்தொகைக்குமிடையிலான விகிதத்தை 1:100 ஆக மதிப்பிடலாம். இது ஆசிரியர்களுக்கும் பெருந்தோட்டப் புற மக்கள் மற்றும் மாணவர்களுக்குமிடையிலான இடைத் தொடர்புகளின் நெருக்கம் அதிகமாகக் காணப்படல் வேண்டும்

என்பதைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது. இதனடிப்படையில் பெருந் தோட்டப்புறச் சமூகத்தினருக்குக் கிடைக்கும் வழிகாட்டல் ஆலோசனை கூறல் சேவை முன்னுதாரணங்கள் என்பன மேம் பட்டிருத்தல் வேண்டும் என்ற எதிர்பார்ப்பு சமூகத்தின் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றது.

பாடசாலைகளின் கல்விசார் அடைவுகளின் வெற்றிகளில் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து வினையாற்றுகையுடன் செயலாற் றுதல் அதிக செல்வாக்கினைச் செலுத்தும் காரணியாக ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. இதற்கான சூழலைப் பாடசாலை மட்டத்திலும் வலய மட்டங்களிலும் கல்வித் தலைவர்கள் ஏற்ப டுத்திக் கொடுக்க வேண்டும். இதற்காக ஆசிரியர்களின் ஈடு பாட்டை மேம்படுத்தல், பாடசாலை மற்றும் வலய மட்டங்களில் தெளிவானதும் குறிப்பானதுமான இலக்குகளை வரையறுத்துக் கொண்டு செயற்படுதல், ஆசிரியர் தலைமைத்துவத்திற்கான வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இன்று பெருந்தோட்டப்புறப் பாடசா லைகளில் அமைப்பு ரீதியான ஆசிரியர் பற்றாக்குறை காணப்பட் டாலும் ஒட்டுமொத்தமான ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இவ்வாறு போதுமானளவு எண்ணிக்கையான ஆசிரியர்கள் இருப்பதனால் அவர்களை வினையாற்றுகையுடன் செயற்படுவதற்கு ஏற்றவாறு கல்வித்துறைசார் தலைவர்கள் வழிப்படுத்துவதன் ஊடாக பாடசாலைகளின் கல்விசார் அடைவு களின் வெற்றிக்கும் சமூகத்தின் மேம்பாட்டிற்கும் வழிவகுக்க முடியும்.

**மத்தியத்தர வர்த்தகமாக ஆசிரியர்கள் எழுச்சிப் பெற்றுள்ளமை**

உலகின் அனைத்து சமூகங்களிலும் குறித்த சமூகம் சார்ந்த கல்விக் கற்ற மத்தியத்தர வர்க்கத்தினர் சமூக மாற்றங்களில் பங்களிப்புச் செய்யும் மாற்ற முகவர்களாகவும் (Change Agent) சமூக மேம்பாட்டிற்கான கருத்துருவாக்கம் செய்பவர்களாகவும் (Opinion Makers) இருந்துள்ளனர். இதற்காக அவர்கள் தமது வி- வாதத் திறமைகளையும், எழுத்தாற்றல்களையும் கருவிகளாக பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இதனையே 1960களில் அமரர்.

இர.சிவலிங்கம், அமரர். திருச்செந்தூரன் போன்றோரும் செய்தனர். அரசியல் தீர்மானங்கள், தொழிற்சங்கத் தீர்மானங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாதகமாக அமைந்தபோது அவற்றை எதிர்த்து குரல் கொடுத்தனர். இதற்காக இவர்கள் பல தடவைகள் அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்கு உள்ளாகினர்.

மலையகத் தோட்டப்புறங்களின் ஆரம்பம் தொடக்கம் 1970களின் இறுதி வரைக்கும் மலையக மக்களின் சமூகக் கட்டமைப்பில் தோட்டங்களின் உரிமையாளர்களும் துரைமார்களும் உயர் வகுப்பினராக காணப்பட்டனர். தோட்ட எழுதுவினைஞர்களும் மேற்பார்வையாளர்களும் வர்த்தகர்களும் மத்தியத்தர வகுப்பினராக இருந்தனர். தோட்டத் தொழிலாளர்கள் தொழிலாளர் வகுப்பு என்னும் கீழ்மட்டச் சமூகமாக காணப்பட்டனர். 1970களின் இறுதித் தொடக்கம் மலையகத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதற்கமைவாக இன்று 12,000 இற்கும் அதிகமான மலையக ஆசிரியர்கள் உள்ளனர். இது மலையகப் பெருந்தோட்டப்புறச் சமூகத்தில் ஆசிரியர்கள் ஒரு மத்தியத்தர வர்க்கமாக எழுச்சிப் பெற்றுள்ளமையை உணர்த்துகிறது. இவர்கள் இச்சமூகத்தின் மாற்றத்திற்காகவும், மேம்பாட்டிற்காகவும் கருத்துருவாக்கம் செய்பவர்களாக தமது வகிபங்கினை மலையக சமூக மேம்பாட்டிற்காக வழங்க வேண்டும். இத்தகைய வகிபங்கு மலையக சமூகத்தின் சமூக, கலாசார, அரசியல், பொருளாதார மற்றும் கல்வித்துறை சார்ந்ததாக இருக்கலாம்.

**முடிவுரை**

இலங்கையில் மலையகப் பெருந்தோட்டபபுற மக்கள் குடியேறி 150 வருடங்கள் ஆகின்றது. இந்த 150 வருடங்கால வரலாற்றில் மலையக மக்களின் வாழ்க்கையில் சமூக பொருளாதார அரசியல் மற்றும் கல்வி போன்ற பல்வேறு துறைகளிலும் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இருந்தபோதிலும் நாட்டில் வாழுகின்ற ஏனைய பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இனக் குழுக்களுடன் ஒப்பிடும்போது மலையக மக்கள் இன்னும் போதுமானளவு முன்னேற்றத்தினை அடையவில்லை. இதனை

இலங்கையில் 2012 ஆம் ஆண்டு இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்புப் புள்ளிவிபரங்கள் உறுதி செய்கின்றன. அதற்கேற்ப இலங்கையில் (25 வயதிற்கு மேற்பட்டோர்) வளர்ந்தோர் கல்வியறிவில் பாடசாலை செல்லாதோர் தேசிய மட்டத்தில் 4.7 சதவீதமாகக் காணப்படுகின்றபோது நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் அவை முறையே 10.2 மற்றும் 9.3 சதவீதமாகக் காணப்படுகின்றன. அதேபோன்று தரம் 1 - 3 வரையில் மாத்திரம் சித்தியெய்தியோர் தேசிய மட்டத்தில் 18.4 சதவீதமாக உள்ளனர். ஆனால் இது நுவரெலியாவில் 31.5 சதவீதமாகவும் பதுளையில் 23.4 சதவீதமாகவும் உள்ளது. மேலும் தரம் 8-10 வரை கல்வி கற்றவர்களின் சதவீதம் தேசிய மட்டத்தில் 24 ஆக உள்ளது. இது நுவரெலியா பதுளை ஆகிய மாவட்டங்களில் முறையே 35.6 மற்றும் 38.8 சதவீதமாக உள்ளது. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை கற்றவர்கள் தேசிய மட்டத்தில் 19.1 சதவீதமாக இருக்கின்ற நிலையில் நுவரெலியாவில் 13.5 சதவீதமாகவும் பதுளையில் 14.7 சதவீதமாகவும் உள்ளது. க.பொ. த. உயர்தரம் கற்றவர்கள் தேசிய மட்டத்தில் 14.3 சதவீதமாகவும் நுவரெலியா மற்றும் பதுளையில் இது முறையே 9.2 சதவீதமாகவும் 13.8 சதவீதமாகவும் உள்ளது. இத்தகைய விபரங்கள் மலையகப் பெருந்தோட்டப்புற மக்கள் இன்னும் போதுமானளவு வளர்ந்தோர் கல்வியறிவில் முன்னேற்றத்தினை அடையவில்லை என்பதைக் காட்டுகின்றது. கணினிசார் எழுத்தறிவில் இலங்கையின் சராசரி 24.2 சதவீதமாக உள்ளது. ஆனால் இது நகர்ப்புறத்தில் 36.8 சதவீதமாகவும் கிராமப் புறத்தில் 22.1 சதவீதமாகவும் தோட்டப் புறங்களில் 8.8 சதவீதமாகவும் உள்ளது. முன்-பள்ளிக் கல்வி பற்றிய விபரங்களை நோக்குவோமாயின் இலங்கையின் தேசிய மட்டத்தில் முன்பள்ளிக்கல்வியில் பங்குபற்றுவோர் சதவீதம் 88.6 ஆக உள்ளது. இது நகர்ப்புறத்தில் 86.6 சதவீதமாகவும் கிராமப்புறத்தில் 86.7 சதவீதமாகவும் தோட்டப்புறங்களில் 77 சதவீதமாகவும் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் இது 40 சதவீதமாகவும் உள்ளது. இத்தகைய கல்விசார் குறிகாட்டிகள் மலையகப் பெருந்தோட்டப்புற மக்கள் குழுவினர் தேசிய மட்டத்திலான நிலையை அடையாமையை நிரூபிக்கின்றனர்.

மலையகப் பெருந்தோட்டப்புற மக்கள் சமூகம் வரலாற்றுக் காலம் தொடக்கம் இன்றுவரை பல்வேறுபட்ட சமூக அரசியல் பொருளாதார கலாசார மற்றும் குடியியல்சார் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இவற்றில் வறுமை பிரதானமானது. 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் செலவுகள் பற்றிய ஆய்வின்படி நகர்ப்புறத்தில் 1.9 சதவீதமாகவும் கிராமப்புறங்களில் 4.3 சதவீதமாகவும் காணப்படு கின்ற நிலையில் பெருந்தோட்டப்பறங்களில் வறுமை 8.8 சதவீத மாக உள்ளது. இவ்வாறு தோட்டப்புறத்தில் நிலவும் உயரிய வறுமைக்கு தேயிலைத் தோட்டங்கள் முறையாகப் பராமரிக்கப் படாமை, திட்டமிட்டு தோட்டங்கள் காடாக்கம் செய்யப்படு கின்றமை போதுமான மீள்நடுகை செய்யப்படாமை தேயிலை மற்றும் இறப்பர்த் தோட்டங்கள் பல்வேறு தேவைகளுக்காக வெளியாருக்குப் பிரித்து வழங்கப்படுகின்றமை போன்ற கார ணங்கள் ஏதுவாகின்றன. இவ்வறுமை காரணமாக வாழ்க்கையைச் சீரமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக விசேடமாகப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காகப் புலம் பெயர்ந்து செல்கின்றனர். இன்னும் பலர் கொழும்பு போன்ற நகரங்களை நோக்கித் தொழிலுக்காகப் புலம்பெயர்கின்றனர். இவ்வாறு தொழிலுக்காகப் புலம்பெயர்வதனால் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படல் கலாசாரச் சீரழிவுகள், பாலியல் ரீதியான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகம் அதிகரிப்பு என்பன மலையகத்தில் என்றும் இல்லாதவாறு அதிகரித்து வருகின்றன.

அரசாங்கத்தினதும் உள்ளூராட்சி சபைகளினதும் சேவைகளை பெருந்தோட்டப்புற மக்கள் பெற்றுக்கொள்வதில் தொடர்ந்தும் போதுமானளவு விழிப்புணர்வு அற்றவர்களாகவே இருந்து வருகின்றனர். பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், குடும்ப ஆலோசகர் மற்றும் குடும்பநலத் தாதி போன்றோரின் சேவைகள் மிகக்குறைவாகவே தோட்டப்புற மக்களுக்குக் கிடைக்கின்றன. இத்தகைய களநிலை உத்தியோகத்தர் களின் சேவைகள் போதுமானளவு கிடைக்குமாயின் பாரியளவு

சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம். அதேபோன்று உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்திப் பணிகள் தோட்டப்புற மக்களுக்குக் கிடைப்பதற்கான தடைகள், உள்ளூ ராட்சி சபைகள் திருத்த சட்டத்தினூடாக நீக்கப்பட்டிருப்பினும் அவை செயல் வடிவம் பெறுவதற்கு மக்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வு தேவைப்படுகின்றது.

பாடசாலைக் கல்வி அடைவுகளின் வெற்றிக்கு முன்-பள்ளிக் கல்வி மிகவும் அவசியமானது என ஆய்வுகள் மூலம் கண்டறியப் பட்டுள்ளன. ஆனால் சகல பெருந்தோட்டப் பிரிவுகளிலும் முறையான முன்-பள்ளிக் கல்விக்கான வாய்ப்புகள் மிகக் குறை வாகவே உள்ளன. முறையான முன்-பள்ளிக் கல்வியை வழங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தோட்ட நிருவாகங்களும் பெருந்தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தினரும் பல கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். இவ்விரு தரப்பினரும் பிள்ளை அபிவிருத்தி நிலையங்கள் என்ற பெயரில் பழைய பாரம்பரியப் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றனர். இந்த நிலையங்களில் பல பொறுப்பாளர்கள் சிங்கள மொழி பேசுபவர்களாக உள்ளனர். இவற்றில் மழலைகள், விளையாட்டுப்பருவப் பிள்ளைகள், முன்-பள்ளி வயதுச் சிறுவர் கள் போன்ற மூன்று வகையான வயதுக் குழுவினரும் பராமரிக்கப் படுகின்றனர். இங்கு முறையான முன்-பள்ளி கல்வி வழங்கு வதற்கான சூழலோ, பயிற்றப்பட்ட ஆசிரியர்களோ இல்லை. இதனால் தமது பிள்ளைகளின் முறையான முன்-பள்ளிக் கல்வி பாதிக்கப் படுவது தொடர்பான விளக்கம் பெற்றோர்களுக்குக் குறைவாக உள்ளது. இதற்கமைய முறையான முன்-பள்ளிக் கல்வியின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு தேவைப்படுகின்றது.

மலையக மக்களின் இளைஞர் மற்றும் யுவதிகள் மத்தியில் கல்வி கற்றவர்கள் பெருந்தோட்டத் துறைசார்ந்த தொழிலகளில் நாட்டம் காட்டுவது மிக மிகக் குறைந்து வருகின்றது. இதற்குப் பெருந்தோட்டத் துறைசார் தொழில் நவீனமயமாக்கம் செய்யப் படாமை, கவர்ச்சியற்ற தொழில்நிபந்தனைகள் மற்றும் சுய கைத்தொழிலாக இதனை மாற்றியமைக்காமை (கூலித்தொழி

லாகவே தொடர்ந்து இருந்து வருகின்றமை) போன்றன காரணங்களாகும். இத்தகைய நிலைமையில் மலையக இளைஞர் யுவதிகள் தங்களது வாழ்க்கைக்கான மாற்றுத் தொழில்துறைகளைத் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் அதற்கான வழிகாட்டலோ ஆலோசனையோ போதுமானளவு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதனைப் பெருந்தோட்டத்துறை சாரா நாட்டின் ஏனைய மக்கள் பிரிவினரோடு ஒப்பிடுகின்றபோது நிலைமை முற்றிலும் மாறுபட்டதாகவுள்ளது. அந்த வகையில் மலையகத்தவர் தவிர்ந்த பெரும்பான்மை மற்றும் ஏனைய சிறுபான்மையினர் மூன்றாம் மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்ட அரச மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிற்கல்வியைப் பாரியளவில் பெற்றுக்கொள்கின்றனர். இந்நிலையங்களில் பெற்றுக் கொள்ளும் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் (National Vocational Qualfication - NVQ) அவர்களைத் திறன் படைத்த தொழிலாளர்களாக (Skilled Labourers) தயார்ப்படுத்துகின்றது. இது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சிறந்த தொழில்வாய்ப்புகளைப் பெற்றக்கொள்ள வழிவகுக்கின்றது. மலையகத்தில் காணப்படும் ஒருசில தொழில் பயிற்சி நிலையங்களுக்கு போதுமானளவு பயிலுனர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. சில நிலையங்களில் தமிழ் மொழிமூல போதனைகள் இடம்பெறுவது இல்லை. இத்தகைய நிலைமைகளினால் மலையக இளைஞர் யுவதிகள் தொடர்ந்தும் ஒழுங்கமைக்கப்படாத (Unorganized Employment Sector) தொழில் துறைகளில் தினக்கூலிகளாகத் தொழில் செய்யும் நிலைமைகளை எதிர்கொள்கின்றனர் (முரளிதரன், 2008).

உலக மயமாதல், தகவற்தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள பல பாதகமான அல்லது பிரதிகூலமான விளைவுகள் இன்று மலையக மக்களின் வாழ்க்கையிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. தேவைக்கு அதிகமான மதுபாவனையில் வளர்ந்தோர்களும் இளைஞர்களும் ஈடுபடுவதால் அது வாழ்க்கையில் பல்வேறு விதமான சீரழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. சமூக தொழில்நுட்பம் அல்லது சமூக

வலைத்தளங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதால் வீட்டில் கற்கும் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. பெற்றோர் சினிமா மற்றும் தொடர் நாடகங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. இவை பிள்ளைகள் மற்றும் இளை ஞர்கள் மத்தியில் ஒரு வகையான அழித்தல் கலாசாரத்தினை (Distructive culture) உருவாக்கி வருகின்றது. போதுமான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமையினால் அடிக்கடி ஏற்படும் மண்சரிவு, வெள்ளம், வீடுகள் தீக்கிரையாதல் போன்ற இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தங்கள், உயிர், சொத்துச்சேதங்கள் மற்றும் முக்கியமான ஆவண இழப்புகள் அடிக்கடி இடம்பெறும் சராசரிச் சம்பவங்களாக மாறியுள்ளன. இத்தகைய சமூக, பொருளாதார மற்றும் கலாசாரப் பிரச்சினைக ளுக்குத் தீர்வுகள் பெற்றுக் கொடுப்பதற்கான வழிகாட்டல் விழிப்புணர்வுகள் ஒரு அத்தியவசியத் தேவையாக உள்ளது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகைதந்து குடியேறிய இந்திய வம்சாவளி தமிழர்கள், அங்கிருந்து பல்வேறு பெறுமதிமிக்க கலாசார அம்சங்களையும் தங்களுடன் கொண்டுவந்தனர். அவற்றில் பொன்னர் சங்கர், அருச்சுனன் தபசு, காமன் கூத்து போன்ற பெறுமதிமிக்க கூத்துக்களும், கோலாட்டம், கும்மி, கரகாட்டம், காவடியாட்டம், போன்ற கலையம்சங்களும் குறிப்பிடத்தக்கவை. இத்தகைய கலாசார அம்சங்கள் இன்று இளஞ்சந்ததியினருக்கும் பொருத்தமாக கைமாற்றம் செய்யப்படா மையினால் அவை மறக்கப்பட்டு அல்லது இல்லாமல் போகின்ற நிலைமை காணப்படுகின்றது. இவற்றை பேணிப் பராமரித்து, இளஞ்சந்ததியினருக்கு கைமாற்றம் செய்யும் கருவியாகக் கல்வி நிறுவனங்களும் ஆசிரியர்களும் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எனவே இந்த முடிவுரையில் தொகுத்து முன்வைக்கப்பட்ட வற்றில் பெருமளவான சமூகப் பொருளாதார மற்றும் கலாசாரப் பிரச்சினைகள் சகல சமூகங்களுக்கும் பொதுவானவை போல தோன்றலாம். ஆனால் அவற்றில் மலையகப் பெருந்தோட்ட சமூகத்துக்கேயுரித்தான விசேட பிரச்சினைகள் பல காணப்படு

கின்றன. கல்வியும் ஆசிரியர்களும் ஒரு சமூக மாற்றத்திற்கான முகவர்களாகும். மலையக ஆசிரியர்கள் தமது கற்பித்தல் தொழிலை சமூகப் பிரக்ஞையுடன் மேற்கொள்ளும் போது, இச்சமூகத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கிடைக்கும். அதனூடாக மலையக சமூக மேம்பாட்டிற் கான தலைமைத்துவத்தினை ஆசிரியர்கள் வழங்க முடியும்.

**உசாத்துணைகள்**

அஞ்சலா டபிள்யூ, லிட்டில், (2002). உழைப்பால் கல்வியில் உயர்வோர், இலங்கைப் பெருந்தோட்டங்களின் அரசியற் பொருளாதாரம், மக்கள் மற்றும் கல்வியை நோக்கியது. சமூக விஞ்ஞானிகளின் சங்கம், கொழும்பு-5, இலங்கை.

இராஜேந்திரன், S (1997). தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினரால் அம்பகமுவ கல்விப்பிரிவில் நடாத்தப் படும் பாடசாலை உள்ளக அபிவிருத்தித்திட்டம் பற்றிய ஓர் மதிப்பீட்டாய்வு. பட்டமேற் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா, ஆய்வுக்கட்டுரை, தேசிய கல்வி நிறுவகம், மகரகமை, கொழும்பு.

இராஜேந்திரம்,து. (2003). இலங்கையில் வசதி குறைந்த பாட சாலைக் கான வெளிநாட்டு உதவி நிகழ்ச்சித்திட்டங்கள். தோட்டத்துறைத் தமிழ்மொழிமூலப் பாடசாலைகளை விசேடமாகக் கருத்திற் கொண்டு ஓர் ஆய்வு. பிரசுரிக்கப்படாத கல்வி முதுத்தத்து வமாணி பட்டத்திற்குரிய ஆய்வுக்கட்டுரை, கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

இலங்கையிற் கல்வி, நூற்றாண்டு விழா மலர், பகுதி (II) (1969). கல்வி கலாசார அலுவல் அமைச்சின் வெளியீடு, இலங்கை.

கல்வி, உள்ளூராட்சி, காணி அமைச்சு, (1997). தோட்டப்பகுதி அரசாங்க தோட்டப் பாடசாலைகளில் தமிழ்மொழிமூல தகுதிகாண் ஆசிரிய பதவிக்கு நியமித்தல், நியமனக் கடிதம், மத்திய மாகாண சபை, மத்திய மாகாணம்.

கல்வி அமைச்சு, (2007). கல்வித்துறை அபிவிருத்திச் சட்டகமும் நிகழ்ச்சித் திட்டமும் (ESDFP), கல்வி அமைச்சு, இலங்கை.

கல்வி, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, (2007). பாடசாலை அடிப்படையிலான பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான பயிற்றப்படாத ஆசிரியர் நியமனம், மத்திய மாகாண சபை, மத்திய மாகாணம்.

கல்விச் சேவைக்குழு, (1983). மாவட்ட சேவையின் கீழ் தோட்டப் பிரதேசப் பாடசாலைகளில் உதவி ஆசிரியர் பதவி நியமனம் - 1983, கல்வி அமைச்சுக் கட்டம், மலே வீதி, கொழும்பு-2, இலங்கை.

கலையரசு, A, அமிர்தலிங்கம்,S. (2007). கருப்பு ஜூலை வன்முறைகள், பதுளை மாவட்ட மலையகத் தமிழ் மக்களின் கல்வியில் ஏற்படுத்திய தாக்கங்கள், தனராஜ்,தை.இ சந்திரபோஸ்,A.S. (பதிப்பு.), இனத்துவ முரண்பாடுகளும் மலையக மக்களும் : பல்பக்க பார்வை (பக். 23-53). அமரர்.இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு, டெக்னோ பிறின்டர்ஸ், கொழும்பு.

கருணாநிதி, மா. (2001). இலங்கையில் பெருந்தோட்டச் சமூகத் தினரின் சமூக நகர்வில் கல்வி விரிவாக்கத்தின் செல்வாக்குப் பற்றிய ஓர் ஆய்வு. பிரசுரிக்கப்படாத கலாநிதி பட்டத்திற்குரிய ஆய்வுக்கட்டுரை, கல்விப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை.

கணேசலிங்கம், ஏ. (2007). மலையகக் கல்வி அபிவிருத்தியில் இனமுரண் பாடுகளின் தாக்கம் : நுவரெலியா மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு, தனராஜ்,தை.இ சந்திர போஸ், A.S. (பதிப்பு.), இனத்துவ முரண்பாடுகளும் மலையக மக்களும் : பல்பக்க பார்வை (பக். 56-97). அமரர்.இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு, டெக்னோ பிறின்டர்ஸ், கொழும்பு.

கணேசமூர்த்தி,ஆ. (2010). "மலையக மக்களின் சமூக-பொருளா தாரம் : ஒரு வரலாற்றுப் பார்வை" அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்த குழு,S.P. கிராபிக்ஸ், கொழும்பு - 06, இலங்கை.

சந்திரசேகரன்,சோ. (1999). மலையகக் கல்வி- சில சிந்தனைகள், கவிதா பதிப்பகம், கொழும்பு-06, இலங்கை.

சந்திரபோஸ்,ஏ.எஸ்., மற்றும் சிவப்பிரகாசம், பி.பி. (2010). இலங்கை பெருந்தோட்ட சமூகத்தின் பாடசாலைக் கல்வி நிலை: எதிர்கால பிரச்சினைகளும் சவால்களும். மனித அபிவிருத்தி தாபனம், கண்டி, இலங்கை.

தனராஜ்,தை. *(2008).* ஒடுக்கப்பட்டோர் கல்வி: மலையகக் கல்வி பற்றிய ஆய்வு, இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை, கொழும்பு-6, இலங்கை.

மக்கள் வங்கி *(1980,* மார்ச்சு*)* பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி வெளியீடு, கொழும்பு, இலங்கை.

மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு, *(1991).* மாவட்ட சேவை அடிப்படையில் பெருந்தோட்டப்புறப் பிரதேசங்களின் தோட்டப்பாடசாலைகளுக்காக தமிழ்மொழிமூல உதவி ஆசிரியர களை நியமித்தல், மத்திய மாகாண சபை, மத்திய மாகாணம்.

மகாலிங்கம்,கு. *(2012).* மலையகக் கல்வி : சில சிந்தனைகளும் ஆலோச னைகளும், யுனிவேர்ஸல் பிறின்டர்ஸ், அட்டன்.

முப்பத்தோராவது கலாசாலை தின சிறப்பிதழ், *(2010).* அரசினர் ஆசிரியர் கலாசாலை, கொட்டகலை.

மோகன்ராஜ், (காதர் .பி.ஏ). *(1984).* இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் (மலையக மக்கள் வரலாறு), ஈழ ஆய்வு நிறுவன வெளியீடு, தெற்கு சிவன் கோயில் தெரு, சென்னை.

பத்மநாபா,S. *(1988).* இலங்கையில் தோட்டப் பள்ளிக்கூடங்களின் கல்வியமைப்பும், பிரச்சினைகளும், தமிழியல், குருநகர், யாழ்ப் பாணம்.

வாமதேவன், எம். *(2014)* மலையகம் சமத்துவ அபிவிருத்தியை நோக்கி, பாக்யா பதிப்பகம், ஹட்டன், இலங்கை.

ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி தமிழ்ச் சங்கம், லயம் சஞ்சிகை, *(2001).* பத்தனை, இலங்கை.

ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி தமிழ்ச் சங்கம், லயம் சஞ்சிகை, *(2004).* பத்தனை, இலங்கை

Bob Marzano's, F. (2003). Fostering Collective Teacher Efficacy: Three Enabling Conditions - Corwin Connect. Retrieved 22 August 2019, from https://corwin-connect.com/2016/07/fostering-collective-teacher-efficacy-three-enabling-condit

Goddard, R., Hoy, W., & Woolfolk Hoy, A. (2004). Collective efficacy beliefs: Theoretical developments, empirical evidence, and future directions. *American Educational Research Association*, 33(3), 3-13

Ganamuthu, G.A. (1977). Education and the Plántation Workers in Sri Lanka, Council of Churches (Christian Aid), Colombo, Sri Lanka.

Hattie. (2016). Collective Teacher Efficacy: The Effect Size Research and Six Enabling Conditions - The Learning Exchange. Retrieved 22 August 2016, from https://thelearningexchange.ca/collective-teacher-efficacy/ Kodituwakku, G.& Abeyratne, L.A. (1990).A *Descriptive Profile of Teachers in Sri Lanka.* Research Division, NIE, Maharagama, Sri Lanka.

Knobloch. (2007). Fostering Collective Teacher Efficacy: Three Enabling Conditions - Corwin Connect. Retrieved 22 August 2019, from https://corwin-connect.com/2016/07/fostering-collective-teacher-efficacy-three-enabling-conditions/

Kotalawala, D.E. et al, (1991).*The Promotion of Primary Education in Disadvantage Areas in Sri Lanka (Education of four sida Supported Programmes).*SIDA, Ministry of Education, Isurupaya, Battaramula, Sri Lanka.

Kulasena, K.G. (1991).Schooling the Disadvantaged (An Evaluation of the Impact of the Sida Supported Primary Schools Development Programme in three Districts).SIDA, Ministry of Education & Higher Education, Sri Lanka.

Lin, N. (1999). Building a Network Theory of Social Capital. Connections, 22, 28-51. from http://www.scirp.org/(S(oyulxb452alnt1aej1nfow45))/reference/ReferencesPapers.aspx?ReferenceID=1888236

Manikam, P.P. (1995). Plantations in Crisis, An Overview, Social Scientists Association, Colombo, Sri Lanka.

Ministry of Nation Building and Estate Infar structure Development, (2005). National Plan of Action for social Development of the Plantation Community 2006-2015, Colombo, Sri Lanka.

Mookiah, M.S. (1997). *Education of The Plantation Tamil Community: Historical Background and Current Status.* Institute of Social Development, Kandy, Sri Lanka.

Mookiah, M.S. (1993). Workers Access to Education in Sri Lanka, Ceylon Workers Congress, Colombo, Sri Lanka.

Muralitharan, S. (2008). *Plantation Youth in Unorganized Sector Employment.* Institute of Social Graphics, Kandy,Sri Lanka.

Nadeson,S.(1993) A History of the Upcountry Tamil People, A Nandalala Publication, By Ranco Printers And Publishers Ltd, Colombo - 3, Sri Lanka.

Navaratne, N. (1998). Plantation Schools Education Development Project Report, MOE, Sri Lanka.

Plan of Operation, (1992-1994). Plantation Schools Education Development Plan, Ministry of Education and Higher Education, Sri Lanka.

Plantation School Education Development project, Project Completion Report 1986 – 1998, Special Implementation Unit, Ministry of Education & Higher Education, Isurupaya, Battaramulla , Sri Lanka.

PSEDP, Special Implementation Unit (1996), Insider Assessment – PSEDP (Agreement Period July 1992 – June 1994), Ministry of Education and Higher Education, Isurupaya, Battaramulla, Sri Lanka.

Robinson, V., Hohepa, M. & Lloyd, C. (2009). *School leadership and student outcomes: Identifying what works and why.* Best evidence synthesis iteration [BES]. New Zealand: Ministry of Education.

Sandarasegaram, S. (2008) New Facts of Teacher Education, Convocation Address, National Institute of Education, Maharagama, and Colombo, Sri Lanka.

Thanarajh, T. (2004). Problems and Issues in Primary and Secondary Education in the Plantations. Karunanithy, M. (Ed.). Pof.S. Sandarasegaraam Felicitation Volume, (2004) (pp. 259 – 269.). Pof. S. Sandarasegaram Manivila Committee, Kumaran Press (Pvt) Ltd, Colombo.

# அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு

| பெயர் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|
| திரு.எம்.வாமதேவன் | BQ 2/2, மனிங் டவுன், வீடமைப்புத் திட்டம் மங்களா வீதி, கொழும்பு 08 | 2693098 |
| பேராசிரியர் தை. தனராஜ் | 7, அலெக்ஸாண்ரா டெரஸ் கொழும்பு 06. | 2583151 |
| திரு.எச்.எச்.விக்கிரமசிங்க | 39/21, அல்விஸ் பிளேஸ், கொட்டாஞ்சேனை, கொழும்பு 13. | 2435652 |
| திரு.இ.ஈஸ்வரலிங்கம் | 45/15A, பிரெட்சிக்கா வீதி, கொழும்பு 06. | 2581201 |
| கலாநிதி.பி.இராமனுஜம் | விகார மாவத்தை, கொலன்னாவை | 2572436 |
| திரு.பி.இராதாகிருஷ்ணன் | 10/3, அலெக்ஸான்ரா ரோட், கொழும்பு - 6 | 0715850538 |
| திரு.ராஜூ சிவராமன் | 9A, அமரசேகர மாவத்தை, கொழும்பு - 05 | 2502817 |
| திரு. வீ.ஏ. மதுரைவீரன் | 92, 2ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு 11 | 2556550 |
| திரு.ஏ.கே.சுப்பையா | 12A, டீ பொன்சேகா றோட், கொழும்பு - 05 | 2587287 |
| திரு. இரா. இராமலிங்கம் | லண்டன் | |
| திரு. ஆர். பரமசிவம் | உக்குவெல் எஸ்டேட், ஹல்துமுல்ல | 0575671234 |

## அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழுவின் பணிகள்
## 2000 – 2019

**நினைவுப் பேருரைகள்**

1. பேராசிரியர் மு. சின்னத்தம்பி
   பெருந்தோட்டத்துறை தமிழ் இளைஞர்கள்: இன்றும் நாளையும் (2000)
2. பேராசிரியர் வி. சூரியநாராயணன்
   இளையமலையகம் - புதிய வாய்ப்புகளும் சவால்களும் (2001)
3. பேராசிரியர் மா. கருணாநிதி
   மலையகக் கல்வி (2002)
4. திருமதி லலிதா நடராஜா
   மலையகப் பெண்கள் (2003)
5. திரு. வ. செல்வராஜா
   மலையக மக்களும் புத்திஜீவிகளும் (2004)
6. பேராசிரியர் சி. மௌனகுரு
   தமிழர் வரலாறும் பண்பாடும்: தெரிந்ததும் தெரியாததும் (2005)
7. திரு.பெ. வேலுசாமி
   மலையக இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் அம்சங்கள் (2006)
8. திரு. லெனின் மதிவானம்
   மலேசியா தமிழரின் சமகால வாழ்வியல் பரிமாணங்கள்: சில அவதானிப்புகள் (2007)
9. திருமதி. ஷோபனாதேவி இராஜேந்திரன்
   பெருந்தோட்டத்துறை சிறுவர் உரிமை மீறல்கள்: சிறுவர் தொழிலாளர் பற்றிய விசேட கண்ணோட்டம் (2008)
10. திரு. இரா. ஜெ. ட்ரொட்ஸ்கி
    சமூக அசைவியக்கத்தில் சட்டங்களின் தாக்கம்: ஒரு வரலாற்றுப் பார்வை
11. திரு. எம். கணேசமூர்த்தி
    மலையக மக்களின் சமூக பொருளாதாரம்: ஒரு வரலாற்றுப் பார்வை (2010)
12. திரு. தெளிவத்தை ஜோசப்
    மலையகம் எனும் அடையாளம்: மலையக இலக்கியத்தின் வகிபங்கு. (2011)
13. திரு. ஆர். ராமேஷ்
    உள்ளூராட்சி அதிகார சபைகளும் பெருந்தோட்ட மக்களும்: ஒரு கோட்பாட்டு ரீதியான விமர்சன நோக்கு (2012)
14. திரு. எஸ். விஜயகுமார்
    மலையக அரசியல் செல்நெறியும் மலையக மக்களும் (2013)

15. திருமதி யசோதரா கதிர்காமத்தம்பி
மலையக மக்களின் வாழ்வியல் மனித உரிமைகள் நோக்கு (2014)
16. திரு. எம்.எம். ஜெயசீலன்
மலையகத் தமிழரின் புலம்பெயர்வும் இலக்கிய ஆக்கமும் (2015)
17. திரு. பா. கௌதமன்
புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில்
மலையக சமூகத்தின் அடையாள முனைப்புகள் (2016)
18. திருமதி எஸ்.வசந்தகுமாரி
மலையகத்தின் அண்மைக்கால நிலச்சரிவுகளும்
மக்கள் எதிர்நோக்கும் சவால்களும் (2017)
19. செல்வி புளோரிடா சிமியோன்
21ஆம் நூற்றாண்டில் மலையகப் பெண்கள்
சவால்களும் சந்தர்ப்பங்களும் (2018)

## கட்டுரைப் போட்டியும் ஆய்வரங்கும்

1. இளைஞர்களுக்கான கட்டுரைப் போட்டி (2000)
2. மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி (2001)
3. ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டி (2002)
4. ஆய்வரங்கு (2003)

## நூல் வெளியீடு

1. மலையகப் பரிசுக்கட்டுரைகள் (2000)
2. சிவலிங்கம் சிந்தனைகள் (2002)
3. மலையக சமகாலப் பிரச்சினைகள் (2003)
4. இனத்துவ முரண்பாடுகளும் மலையக மக்களும்; ஒரு பல்பக்கப் பார்வை (2007)

## கௌரவிப்பு

| | | |
|---|---|---|
| கல்விச் சாதனை | : | செல்வன் நிரோன்காந் மகாலிங்கம் (2004) |
| இலக்கியம் | : | திரு. ஆ. தமிழோவியன் (2004) |
| கல்வி | : | திரு. தி. பாரதி இராமசாமி (2004) |
| இலக்கியம் | : | திரு.பீ. மரியதாஸ் (2005) |
| நாடகம் | : | திரு. ஏ. முத்தையா (2005) |
| கல்வி நிர்வாகம் | : | செல்வி ஏ. சுமதி (2015) |
| பொது நிர்வாகம் | : | திரு. ரீ. கஜேந்திரகுமார் (2015) |
| அரசியல் | : | கௌரவ எம். திலகராஜ் பா.உ (2015) |



**பொன்.இராமதாஸ்**

அமரர் இர.சிவலிங்கம் அவர்களின் இருபதாவது நினைவுப் பேருரை நிகழ்த்தும் திரு. பொன். இராமதாஸ் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

நுவரெலியா மாவட்டத்தினைச் சேர்ந்த இவர் ஹெல்பொட விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயம், புஸ்சல்லாவ இந்து தேசிய கல்லூரி, கம்பளை சாகிரா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக இளங்கலைமாணி பட்டம், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டமேற் கல்வி டிப்ளோமா, ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி பட்டம், தேசிய கல்வி நிறுவகத்தில் பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா, பட்டமேற் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத் தில் கல்வி முதுதத்துவமாணி பட்டம் ஆகியவற்றைப் பெற்றுள்ளதோடு, தற்போது தமது கலாநிதி பட்டத்துக்கான ஆய்விலும் ஈடுபட்டுள்ளார்.

தேசிய கல்வி நிறுவகம் நடத்தும் கற்கைநெறிகளில் வருகைதரு விரிவுரை யாளராகவும் தேசிய மட்டத்தில் நடத்தப்படும் கல்வி முகாமைத்துவ பயிற்சி செயலமர்வுகளில் வளவாளராகவும் செயற்பட்டு வருகின்றார். அத்துடன் கல்வித்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளையும் தொடர்ச்சியாக எழுதி வருகிறார்.

இலங்கையின் பாடசாலை கல்வி முறைமையில் ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய கல்வியியலாளராக, பல்கலைக்கழக விரிவுரையாளராக பணியாற்றி நீண்டகால அனுபவங்களைக் கொண்டுள்ளதோடு மலையகத்தின் கவனிப்பிற்குரிய கல்வியாளராக சீரிய வளர்ச்சி பெற்று வரும் திரு.பொன் இராமதாஸ் அமரர் இர.சிவலிங்கத்தின் இருபதாவது நினைவுப் பேருரையை நிகழ்த்துவதையிட்டு ஞாபகார்த்த குழு பெருமிதமடைவதோடு அவரது பணிகள் மென்மேலும் சிறக்க வேண்டுமென வாழ்த்துகிறது.

**பேராசிரியர் தை.தனராஜ்**
பதிப்பாசிரியர்

Printed by Kumaran Press (Pvt) Ltd. kumbhlk@gmail.com